Sree Annapoorna Sree Gowrishankar
the pride of coimbatore
Restaurant - Sweets - Event Catering

# தி கோவை மெயில்

தமிழ் & ஆங்கில வார இதழ்

ஸ்ரீ அன்னபூர்ணா ஸ்ரீ கௌரிசங்கர்
கோவையின் பெருமை
ரெஸ்டாரண்ட் - ஸ்வீட்ஸ் - ஈவெண்ட் கேட்ரிங்

RNI: TNBIL/2014/55455 | Postal Reg.No: CB/123/2021-23.

கோவை | சென்னை | திருப்பூர் | ஊட்டி | குன்னூர் | கோத்தகிரி | பொள்ளாச்சி | பழனி

Vol No. : 10 Issue No. : 9 www.covaimail.com www.facebook.com/THE COVAI MAIL ஞாயிறு, மே 28 - ஜூன் 3, 2023, 8 பக்கங்கள், ரூ.5/- ஆண்டு சந்தா - ரூ.260/-


தர்மலிங்கேஸ்வரர் கோவில் நிர்வாகத்தில்

## 10 ஆண்டுகளுக்கும் மேலாக முறைகேடு நடக்கிறது!

**- மதுக்கரை தர்மலிங்கேஸ்வரர் கோவில் நிர்வாகி சி.கே.கண்ணன்**

கோவை, மதுக்கரை மார்க்கெட்டில் மிகவும் பிரசித்தி பெற்ற தர்மலிங்கேஸ்வரர் கோவில் உள்ளது. பல நூற்றாண்டு பாரம்பரியமிக்க இந்த கோவில் தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டின்கீழ் உள்ளது. இந்த நிலையில் இந்த கோவிலில் பல்வேறு முறைகேடுகள் நடப்பதாகவும், பக்தர்கள் தரப்பிலிருந்து ஏராளமான புகார்கள் குவிந்து வருவதாகவும், இது தொடர்பாக தமிழக முதல்வர், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் மற்றும் அதிகாரிகளுக்கும் பக்தர்கள் தரப்பில் இருந்து ஏராளமான புகார் மனுக்கள் அனுப்பப்பட்டு உள்ளதாகவும் மதுக்கரை தர்மலிங்கேஸ்வரர் கோவில் நிர்வாகி சி.கே.கண்ணன் கூறினார்.

இதுகுறித்து செய்தியாளர்கள் சந்திப்பில் சி.கே.கண்ணன் கூறுகையில், நான் மதுக்கரை தர்மலிங்கேஸ்வரர் கோவில் நிர்வாகியாக உள்ளேன். எனது பணிக்காலத்தில் என் சொந்த பணத்தில் தர்மலிங்கேஸ்வரர் கோவிலுக்கு தண்ணீர் தொட்டி, பக்தர்கள் ஓய்வு எடுக்க இரண்டு இளைப்பாறும் மண்டபங்கள் கட்டிக் கொடுத்து உள்ளேன். மேலும் அன்னதானம் போன்ற பணிகளையும் செய்து வருகிறேன். தர்மலிங்கேஸ்வரர் கோவிலுக்கு



வரும் வருமானம் முழுவதையும் தணிக்கையாளர் (ஆடிட்டர்) ஒருவரை கொண்டு கணக்கிட்டு முறைப்படி தமிழக அரசின் இந்து சமய அறநிலையத் துறையிடம் ஒப்படைக்க வேண்டும் என்று கூறினேன். ஆனால், இதை தற்போது கோவில் நிர்வாகிகளாக இருக்கும் கிருஷ்ணசாமி, அரசு பஸ் ஓட்டுனர் திருமூர்த்தி, கோவில் பூசாரி பாலசுப்பிரமணியன் ஆகியோர் ஏற்றுக் கொள்ளவில்லை. அவர்கள் ஆடிட்டரும் தேவையில்லை, அரசுக்கும் கணக்கு கொடுக்கவும் தேவையில்லை என்று கூறினார்கள்.

மேலும் அவர்கள் தமிழக அரசு கோவில்களுக்காக வகுத்து வைத்துள்ள சட்ட திட்டங்களையும் கடைபிடிப்பது இல்லை. இதை தவறு என்று சுட்டிக்காட்டிய என்னை தகாத வார்த்தைகளால் திட்டியதுடன், ஆட்களை வைத்து மிரட்டலும் விடுத்தனர். அரசு பஸ் ஓட்டுனராக இருக்கும் கோவில் நிர்வாகி திருமூர்த்தி பக்தர்களிடம் அடாவடியாக செயல்பட்டு வருகிறார்.

இவர்கள் தர்மலிங்கேஸ்வரர் கோவிலுக்கு வரும் பக்தர்கள் தரும் காணிக்கைகளை அண்டாவில் அள்ளிச் செல்வதோடு அன்னதானத்திற்கு பக்தர்கள் தரும் மளிகைப் பொருட்கள், காய்கறிகள் போன்றவற்றையும் தங்கள் சொந்த உபயோகத்துக்கு எடுத்துச் செல்கின்றனர்.

மேலும் பக்தர்களிடம் வசூல் செய்யும் நன்கொடை தொகைகளுக்கு எந்த வித ரசீதும் தருவது இல்லை. கோவில் கட்டுமான பணிகளுக்கு பக்தர்கள் நன்கொடையாக வழங்கும் சிமெண்ட் மூட்டைகளை கள்ளச்சந்தையில் விற்பனை செய்கிறார்கள் . கடந்த 10ஆண்டுகளுக்கும் மேலாக கோடிக்கணக்கில் நடந்து வரும் இந்த முறைகேடுகளை தமிழக அரசு கண்டுபிடித்து, சம்பந்தப்பட்டவர்கள் மீது உரிய சட்ட நடவடிக்கை எடுப்பது மட்டுமின்றி கோவில் பணத்தில் முறை கேடாக சேர்த்த சொத்துக்களையும் பறிமுதல் செய்ய வேண்டும் என்று கூறினார்.

## தர்மலிங்கேஸ்வரர் கோவில் பற்றி கண்ணன் கூறியது அபாண்டமான பொய் !

**- கோவில் அறங்காவலர் கிருஷ்ணசாமி பேட்டி**

தர்மலிங்கேஸ்வரர் கோவில் உடைய தலைவர் கிருஷ்ணசாமியிடம் நாம் கேட்டபோது அவர் கூறியதாவது, தர்ம லிங்கேஸ்வரர் கோயில் 45 ஆண்டுகளாக கோவிலை கட்டி காத்து வருகிறோம். நான் கோவிலின் தலைவராக இருக்கிறேன்.

என்னுடைய பெயர் கிருஷ்ணசாமி கோவிலுக்கு தேவைப்பட்டால் ட்ரஷ்டியை நான் நியமித்துக் கொள்ளலாம், அதன் அடிப்படையில் தான் கோவில் உடைய ட்ரஷ்டியாக கண்ணன் என்பவரை நியமனம் செய்தோம்.

இதுவரை நடந்த 11 மாதங்களில் நடந்த பத்து கூட்டங்களில் அவர் கலந்து கொள்ளவில்லை. அவர் திட்டமிட்டு தலைமையைகைப்பற்ற வேண்டும் என்ற நோக்கில் கோவில் மீது பல்வேறு விதமான புகார்களை தெரிவித்து வருகிறார்.

இதில் எந்த புகாரும் உண்மையானது அல்ல வரவு செலவு பற்றி ஊழல் குறித்து பொய்யான தகவலை கூறி வருகிறார்.

இவர் சரவணன் என்பவரை நியமனம் செய்து கோவிலில் வசூல் செய்து வருகிறார். அந்த வசூல் கணக்கை கேட்டபோது நான் வருமானவரித்துறை இடம் ஒப்படைப்பேன். எல்லா கோயிலில் உள்ள எல்லாருக்கும் பென் டிரைவில் காபி செய்து கொடுத்துள்ளேன். என்று கூறுகிறார்.

தர்மலிங்கேஸ்வரர் கோயில் இந்து சமய அறநிலையத் துறையின் கீழ் வருகிறது. இதன் கணக்கு இந்து சமய அறநிலையத்துறையில் தான் காட்ட வேண்டும். கோவிலில் இருந்து பெறப்படும் தொகைக்கு உடனடியாக ரசீது போட்டு முறையாக செயல்பட்டுக் கொண்டிருக்கிறது.

தொடர்ந்து கோவில் மீது கெட்ட பேர் ஏற்படும் விதமாக பொய்யான ஊழல் புகார்களை தெரிவித்து வருகிறார். அவர் வசூல் செய்த ரூபாய்க்கு கணக்கு கேட்டால் அதைக் காட்ட மறுக்கிறார். கோவிலில் தர்மகர்த்தாவாக இருந்து கொண்டு கோயிலைப் பற்றி பொய்யான தகவலை பரப்பி வருவது மிகவும் மன வேதனை அளிக்கிறது.

இதுகுறித்து அவர் அளித்த புகாரின் அடிப்படையில் விஜிலென்ஸ் அருகாமையில் உள்ள கிராம மக்களிடம் விசாரணை செய்து குற்றச்சாட்டு பொய்யானது என குறி சென்றுள்ளன.

தொடர்ந்து முதலமைச்சர் இந்து சமய அறநிலையத்துறைக்கு தொடர்ந்து கடிதங்கள் தபால்கள் அனுப்பி வருகிறார். எந்த ஒரு பக்தரும் கோயில் மீது புகார் தெரிவிக்கவில்லை இவருடைய நோக்கம் முழுமையாக கோவிலின் தலைமையை கைப்பற்ற வேண்டும் என்ற நோக்கிலேயே செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்.

ஆதலால் அவர் கொடுத்த பேட்டி அவர் சொன்ன காரியங்களை அனைத்தும் உண்மையானவைகள் அல்ல அனைத்து பொய்யானவைகள் என இதன் மூலமாக தெரிவித்துக் கொள்கிறேன்.


ஆரோக்கியமான உடல்நலம், ஆனந்தமான வாழ்க்கை...



உங்களின் தேவைக்கேற்ப
கே.எம்.சி.ஹெச்
முழு உடல் நல பரிசோதனைத் திட்டங்கள்

எக்சிக்யூட்டிவ் முழு உடல் நல பரிசோதனை
எக்சிக்யூட்டிவ் ப்ளஸ் முழு உடல் நல பரிசோதனை
பிரீமியம் முழு உடல் நல பரிசோதனை - CT ஆஞ்சியோகிராம் உட்பட
வேலையில் சேர்வதற்கான உடல் நல பரிசோதனை
கார்ப்பரேட் நிறுவன ஊழியர்களுக்கான சிறப்பு உடல் நல பரிசோதனை

மேலும் விவரங்களுக்கு
98940 08800 / 95007 12888 / 0422 4323727

KMCH கோவை மெடிக்கல் சென்டர் & ஹாஸ்பிட்டல்
அவினாசி சாலை, கோயமுத்தூர் - 641 014.

Mail: mhc@kmchhospitals.com MAKING THE IMPOSSIBLE, POSSIBLE www.kmchhospitals.com

### சிவில் சர்வீஸ் தேர்வில்

## கே.பி.ஆர். ஐ.ஏ.எஸ். அகாடமி மாணவர்கள் தேர்ச்சி பெற்று சாதனை

✍ தி கோவை மெயில்

மத்திய பணியாளர் தேர்வாணையம் இந்த வருடத்திற்கான 933 காலி பணியிடங்களை நிரப்புவதற்காக நடத்தப்பட்ட தேர்வுகளில் இறுதி முடிவுகள் வெளியாகின.

அதில் கோவை கே.பி.ஆர். ஐ.ஏ.எஸ். அகாடமியில் சிவில் சர்வீஸ் தேர்வுக்கு பயிற்சி பெற்றவர்களில் 11 பேர் தேர்ச்சி பெற்றுள்ளனர். மேலும் கோவையை சேர்ந்த சுவாதிகா என்பவர் இந்திய அளவில் 456 இடத்தை பெற்று பெருமை சேர்த்துள்ளார்.

வெற்றி பெற்ற மாணவ மாணவிகளை கே.பி.ஆர். ஐ.ஏ.எஸ். அகாடமியின் நிர்வாக இயக்குனர் கே.பி.டி. சிகாமணி, பயிற்சி இயக்குனர் பழனிமுருகன் ஆகியோர் வாழ்த்தினர்.

இதுகுறித்து கே.பி.ஆர். ஐ.ஏ.எஸ். அகாடமியின் பயிற்சி இயக்குனர் பழனி முருகன் கூறுகையில், 2023 - 24 ஆண்டுக்கான பயிற்சி வகுப்புகள் ஜூலை மாதத்தில் தொடங்க உள்ளது. எங்களது பயிற்சி மையத்தில் வெளியூர் மாணவ மாணவிகள் தங்கி பயிற்சி பெறுவதற்கான விடுதி வசதிகளும் உள்ளன. மேலும் பட்டப் படிப்பு முடித்தவர்கள் மட்டுமல்லாமல் கல்லூரியில் படித்துக் கொண்டிருக்கும் மாணவர்களும் இப்பயிற்சியில் சேரலாம் என்று தெரிவித்துள்ளார். கே.பி.ஆர். ஐ.ஏ.எஸ். அகடமியில் (யூ.பி.எஸ்.சி., சி.எஸ்.இ., ஐ.பி.எஸ். மற்றும் ஐ.ஏ.எஸ். 2022) பயிற்சி பெற்று வெற்றி பெற்றவர்கள் :

ஹரிணி, அருண், சுவாதிகா, சுஷ்மிதா, சிவப்பிரகாஷ், சுப்புராஜ், பிரதீப், அஸ்வின், ஸ்ரீநாத், குடியரசு, ராஜேஷ்.

இதன் மூலம் குடிமைப்பணி தேர்விற்கு கோவையிலிருந்து பயிற்சி பெற்று வெற்றி பெறலாம் என்பதை கே.பி.ஆர். ஐ.ஏ.எஸ். அகடமி தேர்ச்சி பறைசாற்றுகின்றன.

தொடர்புக்கு:

73739 11133, 73739 11577,

கே.பி.ஆர். ஐ.ஏ.எஸ். அகடமி, தடாகம் சாலை, காந்திபார்க், கோவை.



யூ.பி.எஸ்.சி. தேர்வில் வெற்றி பெற்ற மாணவி சுவாதிகாவை கே.பி.ஆர். ஐ.ஏ.எஸ். அகாடமியின் நிர்வாக இயக்குனர் கே.பி.டி. சிகாமணி பாராட்டினார்.

### மேம்பாட்டு ஆராய்ச்சி திட்டத்தைச் செயல்படுத்த

## டாக்டர் மகாலிங்கம் பொறியியல் கல்லூரிக்கு நிதி வழங்க ஒப்புதல்

✍ தி கோவை மெயில்

இந்திய அரசின் மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகம் (MEITY), Chips to Startup (C2S) என்ற திட்டத்தின் மூலம் சுகாதார உபகரணங்களின் வடிவமைப்பு மற்றும் மேம்பாட்டு ஆராய்ச்சி திட்டத்தைச் செயல்படுத்த ரூபாய் 1 கோடியே 39 லட்சத்து 89 ஆயிரம் நிதியை டாக்டர் மகாலிங்கம் பொறியியல் கல்லூரிக்கு வழங்க நிர்வாகம் ஒப்புதல் அளித்துள்ளது.

இந்த ஆராய்ச்சியானது எம்பெடேட் சிஸ்டம் வடிவமைப்பு உற்பத்தியில் (ESDM- Embedded System Design Manufacturing) முன்னணி வகிக்கும் தொழில் துறையுடன் இணைந்து மேற்கொள்ளப்பட உள்ளது.

இத்திட்டத்தின் முதன்மை ஆய்வாளர் டாக்டர் மகாலிங்கம் பொறியியல் கல்லூரியின் மின்னணு மற்றும் தகவல் தொடர்பு துறையின் பேராசிரியர் விஜயகுமார் ஆவார். C2S திட்டத்தின் நோக்கம் 85 ஆயிரம் உயர்தர மற்றும் தகுதிவாய்ந்த பொறியாளர்களுக்கு VLSI மற்றும் Embedded System Design துறையில் 5 வருட காலத்திற்கு பயிற்சி அளிப்பதாகும். மேலும், இத்திட்டம் நாடு முழுவதும் 175 ASICகள் மற்றும் 20 SoCகளை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

சி2எஸ் திட்டம் இளங்கலை, முதுநிலை மற்றும் ஆராய்ச்சி நிலைகளில் சிஸ்டம்ஆன்சிப் (SoC) சிஸ்டம் லெவல் டிசைன் (System Level Design) நுட்பத்தை புகுத்துவதன் மூலம் ஈஎஸ்டிஎம் (ESDM) துறையில் மாபெரும் திருப்பு முனையை ஏற்படுத்தும்.

மேலும் இத்திட்டத்திற்கான ஒப்புதலைப் பெற மேற்கொண்ட முயற்சிகளுக்காக விஜயகுமார் மற்றும் அவரது குழுவினரை, கல்லூரியின் தலைவர் மாணிக்கம், தாளாளர் ஹரிஹரசுதன், செயலாளர் ராமசாமி, முதல்வர் கோவிந்தசாமி மற்றும் டீன் ஆகியோர் பாராட்டினர்.

## இலவச மருத்துவ முகாம்



கே.எம்.சி.ஹெச் மருத்துவமனை சார்பாக நல்லாம்பட்டி அரசு ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளியில் சிறப்பு இலவச மருத்துவ முகாம் நடைபெற்றது. இதில் கே.எம்.சி.ஹெச். மருத்துவமனையின் தலைவர் டாக்டர் நல்ல ஜி பழனிசாமி கலந்துகொண்டு நோயாளிகளை பரிசோதித்தார்.

### கே.எம்.சி.ஹெச் மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில்

## தூய்மை பணியாளர்களுக்கான சிறப்பு இலவச மருத்துவப் முகாம்

✍ தி கோவை மெயில்

கோவை மாநகராட்சி மற்றும் கோவை மெடிக்கல் சென்டர் அண்ட் ஹாஸ்பிட்டல் இணைந்து தூய்மை பணியாளர்களுக்கான சிறப்பு இலவச மருத்துவப் பரிசோதனை முகாம் சனிக்கிழமை தொடங்கியது. இந்த இலவச முகாமை கோவை மாநகராட்சியின் மேயர் கல்பனா ஆனந்தகுமார் மற்றும் மாநகராட்சி ஆணையாளர் பிரதாப் தொடங்கிவைத்தனர். இவர்களுடன் கே.எம்.சி.ஹெச் மருத்துவமனையின் தலைவர் டாக்டர் நல்ல பழனிசாமி மற்றும் மருத்துவமனையின் நிர்வாக செயல் இயக்குனர் டாக்டர் அருண் பழனிசாமி, கோவை மாநகராட்சி கிழக்கு மண்டல தலைவர் இலக்குமி இளஞ் செல்வி கார்த்திக், மற்றும் மாமன்ற உறுப்பினர்கள் உடனிருந்தனர்.

கோவை மாநகராட்சி கிழக்கு மண்டல சுகாதார பணியாளர்கள் சுமார் ஆயிரத்திற்கு மேற்பட்டோர் பயன்பெறும் வகையில் மாதம் முழுவதும் இம்முகாம் நடைபெறவுள்ளது. இந்த முகாமை தொடக்கிவைத்து உரையாற்றிய மாநகராட்சியின் ஆணையாளர் கூறுகையில், நமது நகரின் தூய்மை பணியாளர்கள் உடல் நலம் பற்றி அறிய ஓர் நல்ல வாய்ப்பாக இந்த முகாம் அமையும் என்றும் இந்த சிறப்பு இலவச முகாமை ஏற்பாடு செய்த கே.எம்.சி.ஹெச் மருத்துவமனைக்கு தனது நன்றியை தெரிவித்து கொள்கிறேன் என்றும் கூறினார்.

கே.எம்.சி.ஹெச் மருத்துவமனையின் தலைவர் நல்ல பழனிசாமி கூறுகையில், நீங்கள் தான் இந்த நகரத்திற்கு முக்கியமானவர்கள். சுவர் இருந்தால் தான் சித்திரம் வரைய முடியும் அதுபோல நீங்கள் ஆரோகியமான இருந்தால் தான் வேலை செய்ய முடியும் என்றும், நமது பகுதியை சுத்தம் செய்ய அயராது உழைக்கும் சுகாதார பணியாளர்களுக்கு இலவச மருத்துவ முகாம் நடத்துவது மகிழ்ச்சி அளிக்கின்றது. அதுமட்டுமின்றி கே.எம்.சி.ஹெச் மருத்துவமனை பொது மக்களும் பயன்பெறும் வகையில் பல்வேறு நகரம் மற்றும் கிராமப்புற பகுதிகளில் இலவச மருத்துவ முகாம்கள் தொடர்ந்து நடத்திவருகின்றன என்று கூறினார்.

இம்முகாமில் இருதய, சிறுநீரக, கல்லீரல், ரத்தம், ரத்தத்தில் கொழுப்பு, தைராய்டு, மார்பக எக்ஸ்ரே, அல்ட்ரா சவுண்ட் மற்றும் பெண்களுக்கான கர்பப்பை பரிசோதனை என 5000ரூபாய் மதிப்புள்ள பரிசோதனைகள் இலவசமாக செய்யப்படுகின்றன.



மருத்துவ முகாமில் எடுத்துக்கொண்ட குழு புகைப்படம். மாநகராட்சி ஆணையாளர் பிரதாப், கே.எம்.சி.ஹெச் மருத்துவமனையின் தலைவர் டாக்டர் நல்ல ஜி பழனிசாமி, மருத்துவமனையின் நிர்வாக செயல் இயக்குனர் டாக்டர் அருண் பழனிசாமி, மேயர் கல்பனா ஆனந்தகுமார், கோவை மாநகராட்சி கிழக்கு மண்டல தலைவர் இலக்குமி இளஞ்செல்வி கார்த்திக்.

## இந்துஸ்தான் கல்லூரி மாணவர் சிவில் சர்விஸ் தேர்வில் சாதனை!



✍ தி கோவை மெயில்

இந்துஸ்தான் பொறியியல் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரியில், விமானவியல் துறையில் பயின்ற மாணவன் சுப்புராஜ். இவர் தென்காசியில் விவசாய குடும்பத்தை சேர்ந்தவர். செப்டம்பர் மாதம் நடைபெற்ற யுபிஎஸ்சி தேர்வில் தமிழில் எழுதி, அகில இந்திய அளவில் 621 வது இடம் பிடித்து சாதனை படைத்துள்ளார். இவர் தற்போது டெராடூனில் ஐ.எஃப்.எஸ அதிகாரியாக பணியாற்றி வருகிறார்.

## ஆதி நெக்ஷா ஷோரூமில் புதிய ஜிம்மினி கார் அறிமுகம்



கோவை மேட்டுப்பாளையம் சாலையில் உள்ள ஆதி நெக்ஷா ஷோரூமில் புதிய ஜிம்மினி கார் அறிமுக விழா வெள்ளிக்கிழமை நடைபெற்றது. இந்நிகழ்விற்கு சாய்பாபா காலனி இன்ஸ்பெக்டர் ரெஜினா, என்விரோமென்ட் கன்சர்வேசன் குரூப்ன் தலைவர் முகமுது சலீம், செலிப்ரிட்டி அன்க்கெர் கார்த்திக் கொன்சல்வ்ஸ், ஆதி குருப்ன் துணைத்தலைவர் ஜி.எஸ்.பத்மநாதன், ஆதி மாருதியின் ஜென்ரல் மேனேஜர் சேல்ஸ் அரினா பி.எஸ்.ராமு, கோவை ஆதி நெக்ஸா பிஸ்னஸ் ஹெட் சபரி பாலாஜி ஆகியோர் கலந்துகொண்டனர்.

# கோடை விடுமுறையும் குழந்தைகளும்

✍ ஆசிரியர், தி கோவை மெயில்

இன்னும் பத்து நாட்களில் பள்ளிகள் திறக்க உள்ளன. மிகப் பெரும்பாலான குழந்தைகள் மற்றும் பெற்றோர் குறிப்பாக நகர்ப்புறம் சார்ந்தவர்கள். அவர்கள் இந்த கோடை விடுமுறையைக் கூட பயன் தரும் விடுமுறையாக மாற்றும் அளவுக்கு புதியன கற்றுக் கொள்ளுதல், சுற்றுலா என்று சென்று வருகின்றனர். ஏழைகளுக்கும், பொருளாதார வசதி குறைந்தவர்களுக்கும் இந்த வாய்ப்பு இல்லை. இந்த கோடை விடுமுறையைப் பொறுத்தவரை நடுத்தர மற்றும் உயர்தர வர்க்கத்தினர் தங்கள் குழந்தைகளின் திறன் மேம்பாட்டு வளர்ச்சிக்கு பயன்படுத்துகின்றனர்.

இந்த திறன்களில் துறை சார்ந்த பாடங்களில் டியூசன்கள் என்று தொடங்கி, நடனம், பாட்டு, கையெழுத்து, உடற்பயிற்சி, சிலம்பம், கராத்தே, புதிய மொழி கற்றுக் கொள்ளுதல், ஆங்கில பேச்சுப் பயிற்சி, கணிப்பொறி பாடம் என்று பல வகையான பயிற்சிகளும், சிறப்பு வகுப்புகளும் உண்டு. இன்னொரு குழு தங்களது எதிர்கால படிப்புக்கு வேண்டிய தயாரிப்புகளான ஜே இ இ போன்ற நுழைவுத் தேர்வுகள் போன்றவற்றில் கவனம் செலுத்துகின்றனர். இவையெல்லாம் அந்தந்த மாணவர்களின் விருப்பம், தகுதி, திறன் ஆகியவற்றுக்கேற்ப தேவையான ஒன்றுதான்.

ஆனால் இவற்றையெல்லாம் தாண்டி அனைத்து மாணவர்களுக்கும் தேவையான ஒன்று உள்ளது. அதுதான் நாட்டுக்கும், வீட்டுக்கும் ஒரு நல்ல மனிதராக, குடிமக்களாக உருவாதல் ஆகும். இவ்வாறு உருவாக்குவதில் பள்ளிகளை விட மாணவர்களின் பெற்றோருக்கு பெரும் பங்கு உண்டு. அதற்கு காரணமும் உண்டு. ஏனென்றால் அதனால் அதிகம் பாதிக்கப்படக் கூடியவர்கள் பெற்றோர்களே.

இன்றைய குழந்தைகள் சென்ற தலைமுறையை விட தகவல் தொடர்பிலும், அறிவாற்றலிலும் சிறந்தவர்கள் என்பதில் ஐயம் ஏதும் இல்லை. ஆனால் சமூகத்தின் பொறுப்பு மிக்க குடிமக்களாக உருவெடுக்கிறார்களா, செயல்படுகிறார்களா என்று பார்த்தால் பெரும்பாலும் இல்லை என்ற பதிலே கிடைக்கிறது. இந்த நிலை வீட்டில் தான் தொடங்குகிறது. ஒரு குழந்தை பள்ளி செல்லத் தொடங்கிய உடனே அதன் முன்னேற்றம் என்று கருதி, பல பெற்றோர்கள் செய்யும் செயல்பாடுகள், சிறப்பு வகுப்புகள், டியூசன் போன்றவை அந்த குழந்தையை நகர விடாமல் செய்கின்றன. குழந்தைகளை இந்த அதிகப்படியான சுமைகள் மூச்சு முட்டச் செய்கின்றன. நாளாக நாளாக குழந்தையுமா சுமை தூக்கி பழகி விடுகிறது.

ஒரு பிளஸ் டூ படிக்கின்ற மாணவர், அடுத்து நீட் தேர்வு, இன்ஜினியரிங் படிப்பு என்று வரும் பொழுது போட்டி தொடங்கி விடுகிறது. அடுத்து கல்லூரி முடித்து வேலை வாய்ப்புக்கும் அதே போட்டி தொடர்கிறது. நேரம் இன்றி போட்டியில் ஓடும் போது எப்படியோ வேலை கிடைத்தாலும் நிற்பதற்கு நேரமில்லை. பெற்றோர்களுடன் இருப்பதற்கும், நேரம் செலவிடவும் முடிவதில்லை. முதல் இடைவெளி இங்கு தொடங்கி விடுகிறது.




அடுத்த இடைவெளி என்பது இளைஞர்கள் வாங்கும் அதிக சம்பளம். அதற்கு ஏற்றாற் போல வாழ்க்கை முறையில் மாற்றமும் ஏற்படுகிறது. கல்விக் கடன் முடித்து வீட்டுக் கடன், கார் கடன் என்று ஓடிக்கொண்டிருக்கும் பொழுது பெற்றோர்களை கவனிக்க நேரமில்லை. பல பெற்றோர்கள் "என் மகன் அமெரிக்காவில் இருக்கிறான், அங்கு இருக்கிறான், இங்கு இருக்கிறான், அவ்வளவு சம்பாதிக்கிறான் " என்று பெருமையுடன் கூறிக்கொண்டு தங்களது வயதான காலத்தில் உதவிக்கு ஆள் இல்லாமல் தவிப்பதை கண்கூடாகக் காண முடிகிறது.

மூன்றாவதாக மெல்ல மெல்ல குடும்பங்கள் சிறிதாகி வருகின்றன. சொல்லப்போனால் காப்ஸ்யூல் போல மாறி வருகின்றன. ஒரு குடும்பம் என்பது அம்மா, அப்பா, ஒற்றை குழந்தை என்பது இன்று சாதாரணமாகிவிட்டது. உற்றார், உறவினர்கள், நண்பர்கள் கூட்டம் என்பது அரிதாகி வருகின்றது. இன்னும் சொல்லப்போனால் தொலைக்காட்சியும், செல்போனும் தான் இன்று மக்களுடைய நட்பும் சுற்றமும் என்று ஆகிவிட்டது. போதாக்குறைக்கு ஆன்லைன் டெலிவரி மூலம் எதையும் வாங்கலாம் என்பதும், பணம் இல்லாவிட்டால் கடன் அட்டை மூலம் வாங்கலாம் என்பதும் இன்று பல குடும்பங்களில் சாதாரணமாக புழக்கத்திற்கு வந்துவிட்ட விஷயம் ஆகும்.

பொதுவாக குழந்தைகள் தனியாக வளர்வதாலும், இதுபோலவே பல சிறு குடும்பங்களும் இருப்பதாலும் சொல்லிக் கொள்ளும் படியான உறவுகள் என்பது இருப்பது இல்லை. இன்னும் கொஞ்ச நாளில் கொழுந்தனார், கொழுந்தியாள், சகலை, அண்ணன் மகள், சித்தி, சித்தப்பா, அத்தை, மாமா என்று பல ரத்த உறவுகள் நடைமுறையில் இருக்காது என்றே தோன்றுகிறது.

பொருளாதார முன்னேற்றம் என்று பார்த்தால் அதற்கு தனி வழி இருக்கிறது. அந்த வழியில் செல்வதற்காக குடும்ப உறவு நட்புகளை விலக்க வேண்டிய அவசியம் இல்லை.அதிலும் வாழ்வில் ஒரு சிக்கல் என்று வரும் பொழுது உறுதுணையாய் இருப்பது என்றுமே உண்மையான உறவுகளும் நட்புகளும் தான். அந்த உறவுகளையும் நட்புகளையும் குழந்தைக்கு அறிமுகப்படுத்தி அவர்களை அடுத்த தலைமுறையின் நல்ல குடிமக்களாக வளர்த்தெடுக்க வேண்டியது மிகவும் அவசியம். அதற்கு நேரமில்லை என்பவர்களுக்கு இந்த கோடை விடுமுறை போன்ற காலங்கள் ஒரு வரப்பிரசாதம். அதை சரியாக பயன்படுத்திக் கொண்டால் அந்த குழந்தைகளின் எதிர்காலத்திற்கும் நல்லது : பெற்றோர்களின் எதிர்காலத்திற்கும் நல்லது : நமது சமூகத்தின் எதிர்காலத்துக்கும் நல்லது!

## நுண்ணறிவு பிரிவு உதவி ஆணையர் பொறுப்பேற்பு



✍ தி கோவை மெயில்

கோவை மாநகர காவல்துறையில் நுண்ணறிவு பிரிவு உதவி ஆணையராக ஆனந்த ஆரோக்கியராஜ் பொறுப்பேற்றுக் கொண்டார். கோவை மாநகர காவல் நுண்ணறிவு பிரிவு உதவி ஆணையராக இருந்தவர் பிரபாகரன். இவர் நிர்வாக காரணங்களால் பணியிட மாற்றம் செய்யப்பட்டார். இதனை அடுத்து இந்த பொறுப்பு சிறப்பு நுண்ணறிவு பிரிவு (எஸ்.ஐ.சி) உதவி ஆணையராக பதவி வகித்து வரும் மகேஸ்வரனுக்கு வழங்கப்பட்டது.

இந்த நிலையில், கருமத்தம்பட்டி டி.எஸ்.பியாக பணியாற்றி வந்த ஆனந்த் ஆரோக்கியராஜ் கோவை மாநகர காவல் துறையின் நுண்ணறிவு பிரிவில் உதவி கமிஷனராக நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

இதனையடுத்து வியாழக்கிழமை அன்று ஆணையர் அலுவலகம் வந்த அவர் கோப்புகளில் கையெழுத்திட்டு புதிய உதவி ஆணையராக பொறுப்பேற்றுக் கொண்டார்.

# குரு-சிஷ்ய உறவு அடுத்தடுத்த பிறவிகளிலும் தொடருமா?

✍ தி கோவை மெயில்

கேள்வி: வாழ்வு மற்றும் மரணத்தையும் தாண்டி சில உறவுகள் நீடிக்கும் என்று நீங்கள் சொன்னீர்கள். சென்ற பிறவியில் ஒரு குருவிற்கும் சீடருக்கும் இடையில் இருந்த உறவு, பல பிறவிகளுக்கும் தொடருமா?

சத்குரு: ஆமாம், நிச்சயமாக. பொதுவாக, இந்த ஒரு உறவுதான் பல பிறவிகளுக்கும் தொடரும். குருவின் பணி தொடர்கிறது. மிகவும் ஆழமாக அன்பு செலுத்தியிருந்தாலும், கணவன் மனைவி, காதலர்களின் உறவு மீண்டும் அடுத்த பிறவிகளில் தொடர்வது என்பது மிகவும் அரிதானது. பொதுவாக, குருசிஷ்ய உறவுதான் பல பிறவிகளுக்கும் தொடரும்.

பிற உறவுகள் அனைத்தும் ஒரு தேவைக்காகவே ஏற்படுகிறது. அந்தத் தேவை பூர்த்தியாகிவிட்டால், அந்த உறவு முடிந்துவிடுகிறது.


பிறவிகளுக்கும் அப்பால் அல்லது பிறவிகளின் ஊடே உறவுகள் தொடரும் சாத்தியம், அந்த உறவு உடல்தன்மையின் எல்லையைக் கடந்து நின்றால் மட்டுமே நிகழும். 'உடல் தன்மை' என்று நான் சொல்லும்போது, மனம் மற்றும் உணர்ச்சி அளவில் நிகழ்பவற்றையும் சேர்த்துதான் சொல்கிறேன்.

பொதுவாக குருசிஷ்ய உறவுதான் இப்படி உடல்தன்மையின் எல்லையையும் கடந்து நிற்கும். இப்படி நிகழ்வது ஏனென்றால், குரு சிஷ்ய உறவுதான் எப்போதைக்குமான உறவாக இருக்கிறது. குருவின் இருப்பைப் பற்றி சிஷ்யர் ஏதும் அறிந்திருக்காவிட்டாலும் கூட குருவின் வேலை சிஷ்யரின் இருப்பின் மேல் தொடர்கிறது. இந்த உறவு எப்போதும் சக்தியின் அடிப்படையில்தான் இருக்கிறது. அது உணர்ச்சி ரீதியானதோ, மனம் ரீதியானதோ அல்லது உடல் ரீதியானதோ அல்ல.

சக்திரீதியான உறவு ஏற்பட்டுவிட்டால், பிறகு அந்த சக்திநிலை ஒரே நீட்சியாக அமைந்துவிடுகிறது.

மீண்டும் பிறவிகள் நிகழ்ந்தாலும், சம்பந்தப்பட்ட உடல்கள் மாறிவிட்டதா அல்லது அதே உடல்தானா என்பதைக் கூட சக்திநிலை நீட்சி உணர்வதில்லை. அந்த சக்தி கரைந்து முடியும்வரை அந்த உறவு நீடிக்கிறது. சக்திக்கு எப்போதும் மறுபிறப்புகள் கிடையாது. உடல் மட்டுமே மறுபிறப்பு எடுக்கிறது.

சக்தி நீட்சி அடைந்துவிட்டால், பிறகு அந்த சக்தி கரைந்துபோகும் வரை உறவும் தொடர்கிறது. எனவே, நிச்சயமாக, இந்த உறவுதான் தொடர்ந்து நீடிக்கிறது.



## கே.பி.ஆர். கல்லூரியில் அதிநவீன மையம் துவக்கம்

✍ தி கோவை மெயில்

கே.பி.ஆர். பொறியியல் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரியில், மோட்ரொப் (MODROB) திட்டத்தின் ஒரு பகுதியாக அகில இந்திய தொழில்நுட்பக் கல்வி கவுன்சிலின் நிதி உதவி மூலம், ஸ்மார்ட் ஆன்டனா அமைப்புகள் மற்றும் அளவீடுகளுக்கான அதிநவீன மையம் துவக்கப்பட்டுள்ளது.

இதனுடைய திறப்பு விழா வியாழக்கிழமை நடைபெற்றது. இந்நிகழ்விற்கு பெங்களூரு பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனத்தின் விஞ் ஞானி செல்வநாயகி, கல்லூரியின் முதல்வர் அகிலா, மின்னணுவியல் மற்றும் தகவல் தொடர்பு பொறியியல் துறையின் தலைவர் இந்திரா ஆகியோர் தலைமை தாங்கினார்.

இந்த மையம், ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டிற்கான மையமாக செயல்படும். சமீபத்திய தொழில்நுட்பம் மற்றும் வளங்களைக் கொண்டு, வயர்லெஸ் தகவல் தொடர்புகளின் சாத்தியங்களை மாணவர்களும் ஆசிரியர்களும் அறிவதற்கான வாய்ப்பை இம்மையம் அமைத்துத் தரும்.

## மகாலிங்கம் பொறியியல் கல்லூரியில் புரிந்துணர்வு ஒப்பந்தம்



டாக்டர் மகாலிங்கம் பொறியியல் கல்லூரி மற்றும் தமிழ்நாடு அப்பெக்ஸ் திறன் மேம்பாட்டு மையமும் இணைந்து திறன் மேம்பாட்டு பயிற்சி திட்டங்களை ஏற்பாடு செய்வதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தை பரிமாற்றிக் கொண்டனர்.






# அதிநவீனக் கருவிகளுடன் உயிர் காக்கும் கே.ஜி. மருத்துவமனை

## துல்லியமான, தரமான MRI ஸ்கேன்

டாக்டர் M.கருணாகரன், எம்.ஆர்.ஐ. துறை கதிரியக்க நிபுணர்



ஒரு நோயை முழுவதுமாக, துல்லியமாகக் கணிக்க எக்ஸ்ரே, சி.டி. ஸ்கேனுக்கு அடுத்தபடியாக, எம்.ஆர்.ஐ. ஸ்கேன்தான் மருத்துவர்களுக்குப் பெரிதும் உதவுகிறது. இதுகுறித்து கே.ஜி.மருத்துவமனையின் MRI துறை கதிரியக்க நிபுணர் டாக்டர் M.கருணாகரன் கூறியதாவது,

'தற்போதுள்ள ஸ்கேன் பரிசோதனைகளில் மிகவும் சிறந்தது, காந்த அதிர்வு அலை வரைவு (MRI - Magnetic Resonance Imaging) ஸ்கேன்தான். பல நோய்களை மிகத் தெளிவாகவும் துல்லியமாகவும் கணிப்பதில் இது முதலிடம் பெறுகிறது. எக்ஸ்ரே, C.T. ஸ்கேன் கருவிகள்போல் இது எக்ஸ் கதிர்களைப் பயன்படுத்தி உடல் உறுப்புகளைப் படம் பிடிப்பதில்லை. மாறாக, உடலில் ஒரு காந்தப் புலத்தை உருவாக்கி, ரேடியோ அதிர்வலைகளைப் பயன்படுத்தி, ஒரு கணினியின் உதவியுடன் உறுப்புகளைப் படம்பிடித்துக் காண்பிக்கும்.

இதன் தொழில்நுட்ப வல்லுநர்கள், எந்த உறுப்புக்கு ஸ்கேன் தேவை எனத் தீர்மானித்து, அப்பகுதிக்கு எவ்வளவு காந்தக் கதிர்கள் தேவை எனக் கணக்கிட்டு, காந்தக் குழாயிலிருந்து கதிரை அனுப்பி சோதனை செய்வார்கள்.

மூளை தொடர்பான நோய்களுக்கான காரணம் தெரிய, [illegible]

முதுகெலும்பின் நிலை மற்றும் தண்டுவடத்தின் தன்மை அறிந்து, கழுத்து வலி, முதுகு வலி, இடுப்பு வலி போன்றவற்றுக்கு தகுந்த சிகிச்சை பெற முடியும். எலும்புகளை இணைக்கும் தசைநாண்கள் (Ligament) எம்.ஆர்.ஐ. ஸ்கேனில்தான் தெரியும். எனவே, விபத்துகளில் ஏற்படும் எலும்புத் தசை நோய்களைக் கண்டறிய இதுதான் சிறந்த பரிசோதனை.

குறிப்பிட்ட சில இருதயநோய்களைக் கணிக்கவும்; காது, மூக்கு, தொண்டை தொடர்பான எல்லா நோய்களையும்; உடலில் உள்ள மென்திசுக்களை ஆராயவும்; இரத்தக் குழாய்களில் உண்டாகும் வீக்கம், பிறவி அமைப்புக் கோளாறுகள் போன்ற பல நோய்களையும்; பெண்களுக்கு ஏற்படுகிற கருப்பைக் கோளாறுகளையும், மார்பகப் புற்றுநோயை ஆரம்ப நிலையிலேயே அறியவும்; ஆண்களுக்குப் புராஸ்டேட் வீக்கம் / புற்றுநோய் போன்றவற்றைக் கணிக்கவும் இது உதவுகிறது.

பொதுவாக ஒரு நோயை முழுமையாகக் கணிப்பதற்கும், அதற்கான சிகிச்சையை முடிவு செய்வதற்கும், சிகிச்சைக்குப் பிறகு நோய் குணமாகிறதா என்று விவரத்தைத் தெரிந்துகொள்வதற்கும் இது பெரிதும் பயன்படுகிறது.

கர்ப்பிணிகள், கர்ப்பமடைய வாய்ப்பிருப்பவர்கள், தாய்ப்பால் தரும் தாய்மார்கள் மற்றும் குழந்தைகளுக்கும் [illegible] எம்.ஆர்.ஐ. ஸ்கேன் எடுக்கப்பட்டிருந்தால், அடுத்து எத்தனை மணி நேரம் கழித்துக் குழந்தைக்குத் தாய்ப்பால் தருவது என்பதை மருத்துவரிடம் கேட்டுக்கொள்ள வேண்டும்.

கே.ஜி.மருத்துவமனையில் உள்ள MRI ஸ்கேன் முற்றிலும் நவீனமானது. [illegible] சிகிச்சையும் தரமானது' என்றார்.



## தகுந்த கருவிகளின் துணைகொண்டு சிகிச்சை பெறுங்கள்!

டாக்டர் T.R.சரவணன், Consultant Radiologist



கே.ஜி.மருத்துவமனையில் அல்ட்ராசவுண்ட் ஸ்கேன் துறையில் 18 வருடமாகப் பணியாற்றிவரும் டாக்டர் சரவணன் கூறியதாவது, 'இங்கு 3D, 4D எனும் இரண்டு நவீன அல்ட்ராசவுண்ட் ஸ்கேன் இயந்திரம் [illegible]

[illegible]

இதன்மூலம் கல்லீரல், மண்ணீரல், கணையம், சிறுநீரகம், பெருங்குடல், சிறுநீர்ப்பை உள்ளிட்ட எல்லா உறுப்புகளிலும் ஏற்படும் பிரச்னைகளைக் கண்டுபிடித்துவிடலாம். [illegible]

உயிர் காக்கும் காலத்தை சரியாக உபயோகப்படுத்தும் ஒரு சிகிச்சை முறை இந்த அல்ட்ராசவுண்ட் ஸ்கேன். [illegible]

உடலில் உள்ள இரத்தக்குழாய் நன்றாக இயங்குகிறதா, அடைப்பு இருக்கிறதா என்றும் ஆய்வு செய்யலாம். [illegible] கருவில் இருக்கும் குழந்தையை 12 முதல் 14 வது வாரத்தில் ஸ்கேன் செய்து [illegible] 20 முதல் 22 வது வாரத்தில் ஸ்கேன் செய்யப்படும் அனாமலி ஸ்கேனில் குழந்தையின் உடல் உறுப்புகள் ஒவ்வொன்றும் சரியாக இருக்கிறதா என்றும் அறியமுடியும்.

20 முதல் 25 வது வாரத்தில், [illegible]

[illegible] என்றார்.





பா.கா.மணிகண்டன்
தி கோவை மெயில்



நோயில்லா சமுதாயம் உருவாக 'வாரம் ஒரு மருத்துவ விழிப்புணர்வு செய்தி' என்ற வகையில் இந்த வாரம் உயிர் காக்கும் நவீன மருத்துவ உபகரணங்கள் குறித்து கே.ஜி. மருத்துவமனையின் நிறுவனர் டாக்டர் பத்மஸ்ரீ கே.ஜி.பக்தவத்சலம் அவர்கள் கூறியதாவது,

'மருத்துவ அறிவியல் வேகமாக முன்னேறி வரும் தற்போதைய நிலையில் நாளும் புதுப்புதுக் கருவிகள் கண்டுபிடிக்கப்படுகின்றன. [illegible] அப்படிப்பட்ட உபகரணங்களும், உயிர் காக்கும் சிகிச்சை முறைகளும் ஒருங்கே கொண்டதுதான் கே.ஜி. மருத்துவமனை.

பொதுவாக, அதிகபட்ச வயிற்று வலிக்கு ஆரம்பத்தில் எக்ஸ்ரே எடுக்கப்படும். [illegible] கதிரியக்கவியல் துறை (Imaging and Radiology) உள்ளது. அத்துடன், Ultrasound துறை, Mobile எக்ஸ்ரே, மெமோகிராம், Cath Lab, Endoscopy என ஒவ்வொரு துறையிலும் நவீன மருத்துவக் கருவிகளும் உள்ளன.

இந்த உபகரணங்களின் பயனால் [illegible]


உங்கள் மருத்துவத் தேவைக்கு சிறந்த மருத்துவ உபகரணங்கள் இல்லாத ஏதோ ஒரு மருத்துவமனைக்கு நீங்கள் சென்றிருந்தால், அங்கே இருந்து வேறு மருத்துவமனைக்கு நோயைக் கண்டறிய வலியுடன் ஆம்புலன்ஸில் அலைய வேண்டி வரும். அதேநேரம் உங்களுக்கு எந்த அலைச்சலும் இல்லாமல் எங்கள் கே.ஜி.மருத்துவமனை ஒரு உயர் ரக சிகிச்சை அளிக்கும் என்பதில் எந்த சந்தேகமும் வேண்டாம்.

தலையில் அடிபட்டுவிட்டது, எக்ஸ்ரே எடுத்தும் எதுவும் கண்டறிய முடியவில்லை எனில், அடுத்து C.T. ஸ்கேன் எடுக்க வேண்டும். இது மிகவும் அதிக விலையுள்ள சிறந்த எக்ஸ்ரே கருவி, ஜெர்மனில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டது. இது, நோயாளிகளில் சில விநாடிகளில் தலை முதல் கால் வரை முழுவதும் ஸ்கேன் செய்துவிடும். [illegible] மனித உடலைப் பல்வேறு கூறுகளாகப் பகுப்பாய்வு செய்து பிரச்சினைகளை உடனே சொல்லிவிடும். இதன் துணை இல்லாமல் தலைப் பகுதிக்கான சிகிச்சைகளை செய்வது சிரமம்.

ஆசியாவிலேயே முதல்முறையாக கே.ஜி. மருத்துவமனையில் கொண்டு வரப்பட்ட C.T. ஸ்கேன் இயந்திரம், ஒரு விநாடியில் 128 ஸ்லைஸ், 5 விநாடியில் 660 ஸ்லைஸ் என வேகமாக ஸ்கேன் செய்துவிடும். இதன்மூலம், ஒரு நோயாளிக்கு எங்கே, [illegible] என்பதை மிகத் துல்லியமாக அறியலாம். இருதயத்திற்குச் செல்லும் [illegible] அல்லது [illegible] இரத்த ஓட்டம் [illegible] இரத்த ஓட்டம் [illegible] இரத்தம் உறைந்து [illegible] எளிமையாகக் கண்டறியலாம்.

அடுத்து, MRI ஸ்கேன். இது எக்ஸ்ரே அல்ல, காந்த அதிர்வு அலை வரைவு (Magnetic Resonance Imaging) ஸ்கேன் என்பது சக்திவாய்ந்த காந்தத்தின் உதவியுடன் உடலில் உள்ள திசுக்களைத் தூண்டுதல் கொடுத்து, அப்போது ஏற்படும் மாற்றத்தின் படங்களை கம்ப்யூட்டர் திரையில் காட்டும். இது சி.ஜி. ஸ்கேன் இயந்திரம்போலத்தான் இருக்கும்.

"ஆசியாவிலேயே முதல்முறையாக கே.ஜி. மருத்துவமனையில் கொண்டு வரப்பட்ட C.T. ஸ்கேன் இயந்திரம், ஒரு விநாடியில் 128 ஸ்லைஸ், 5 விநாடியில் 660 ஸ்லைஸ் என வேகமாக ஸ்கேன் செய்துவிடும்"



டாக்டர் கே.ஜி.பக்தவத்சலம், தலைவர், கே.ஜி. மருத்துவமனை

ஆனால் அதில் உள்ள எக்ஸ்ரே கதிர்களால் ஏற்படும் பக்கவிளைவுகள் இதில் இல்லை. எங்களிடம் உள்ள அதிநவீன 1.5 Tesla MRI ஸ்கேன் இயந்திரம் மூலம் மூளை, தண்டுவடம், நரம்பு, எலும்பு சம்பந்தமான அதாவது மூளைக்கட்டி, பித்தப்பை கற்கள், புற்றுநோய், மஞ்சள் காமாலை போன்ற நோய்களின் தன்மைகளை எளிதாகக் கண்டறிய முடியும். இதைக் கையாளவும் சிறந்த மருத்துவர்கள், தொழில்நுட்ப வல்லுநர்கள் உள்ளனர்.

இந்த இரண்டு கருவிகளுக்கும் மேலாக நோயின் துல்லியத்தைக் கண்டறிய Digital Subtraction Angiography (DSA) எனும் இயந்திரம், எலும்புகள் தவிர்த்து இரத்தக் குழாய்களை மட்டும் படம் பிடிக்கும். இந்த இயந்திரம் இரத்தக் குழாய் வீக்கத்தைக் கண்டறிந்து, அதற்குத் தீர்வும் தரும். ஒருவருக்கு இருக்கும் இரத்தக் குழாய் வீக்கம், திடீரென வெடித்தால் உடனடி மரணம் ஏற்படும். இந்த சிக்கலான நோய்க்கும் சிகிச்சை அளிக்க எங்களிடம் சிறப்பு வசதி உள்ளது.

அல்ட்ராசவுண்ட் ஸ்கேன் என்பது அடிப்படை சிகிச்சை முறை. 1984 இல் கோயமுத்தூரில் முதன்முறையாக ஜப்பானில் இருந்து இந்த இயந்திரத்தை இறக்குமதி செய்தேன். வழக்கமான அல்ட்ராசவுண்ட் உடலில் உள்ள கட்டமைப்புகளின் படங்களை உருவாக்க ஒலி அலைகளைப் பயன்படுத்தும். டாப்ளர் அல்ட்ராசவுண்ட் என்பது இரத்த நாளங்கள் வழியாக இரத்தம் நகர்வதைக் காட்ட ஒலி அலைகளைப் பயன்படுத்தும் ஒரு இமேஜிங் சோதனை ஆகும். இது, நாடித்துடிப்பு உள்ளதா, மூட்டுக்கு இரத்த ஓட்டம் உள்ளதா என்பதையும் காட்டும். இதன்மூலம், புற தமனி நோய் (PAD) அல்லது நீரிழிவு கால் புண் போன்றவற்றையும் கண்டறியலாம்.

மேலும், குழந்தைகளுக்கு ஏற்படும் வயிற்று வலியால், குடலுக்குள் குடல் மாட்டிக்கொண்டு சிரமப்படுவார்கள். அந்தக் குழந்தைகளுக்கு அல்ட்ராசவுண்ட் ஸ்கேன் மூலம் நோய் கண்டறியப்பட்டு, அதற்கு ஏற்ற சிகிச்சையும் அளிக்கப்படும்.

Cath Lab என்பது இருதயத்தைப் படம் பிடிக்கும் கருவியுள்ள ஆய்வகம். திடீரென ஒருவருக்கு மாரடைப்பு ஏற்பட்டால், உடனடியாக அவரை கேத் லேப்பிற்கு (Catheterization lab) அழைத்துச் சென்று, ஆஞ்சியோகிராம் எனும் சிறப்பு எக்ஸ்ரே பரிசோதனை மூலம் அடைபட்ட இரத்த நாளத்தைக் கண்டுபிடிக்கலாம். பின்னர் தேவைப்பட்டால் அதாவது இரத்த நாளத்தில் சுருக்கம் இருந்தால் ஸ்டென்ட் போடப்படும். இது, அவசர கால சிகிச்சைக்கு ஏற்றது.

இதுமட்டுமல்ல, பைபிளேன் கேத் லேப் உதவியுடன் ஆஞ்சியோபிளாஸ்டி சிகிச்சை செய்யலாம். மொபைல் எக்ஸ்ரே, அத்துடன் Portable எக்ஸ்ரே வசதிகளும் எங்களிடம் உள்ளன.

அடுத்து, கருத்தரிக்காத பெண்களுக்கு கருப்பைக் குழாய் கணிப்பு ஊடுகதிர் (HSG) எனும் சிறப்பு எக்ஸ்கதிர்கள் சோதனை ஆய்வு மூலம் கருப்பைக் குழாயில் உள்ள வேறுபாடுகளையும் கருக்குழாய் துவாரத்தின் தன்மையையும் துல்லியமாகக் கணிக்கலாம். கருக்குழாயில் அடைப்புகள் இருந்தாலும் நீர்க்கட்டிகள் இருந்தாலும் மற்ற நோய் பாதிப்புகள் இருந்தாலும் இதில் தெரிந்துவிடும். இந்த 15 நிமிடப் பரிசோதனையில், திருமணமாகி 5 முதல் 10 வருடமாக ஏன் கருத்தரிக்கவில்லை எனும் காரணத்தையும் கண்டறிந்து விடலாம்.

இதன்மூலம் எங்கள் டிஜிட்டல் ஃப்ளோரோஸ்கோபி துறையைச் சேர்ந்த கலாவதி, டாக்டர் சந்திரகலா மாறன், டாக்டர் மகாலட்சுமி ஆகியோர் கருமுட்டை குழாய் அடைப்பைக் கண்டறிந்து விடுவார்கள். சில நேரங்களில் இந்த பரிசோதனையின் போதே அடைப்புகள் நீக்கப்பட்டு, கரு உருவாக வாய்ப்புகள் உருவாகும்.

ஆக, இவ்வளவு நவீனக் கருவிகளையும் மருத்துவ வசதிகளையும் கொண்ட ஒரு சிறந்த Imaging and Radiology Department, எங்கள் கே.ஜி. மருத்துவமனையின் தரத்தை உங்களுக்கு உரைக்கிறது. இதைப் பயன்படுத்தி, ஒவ்வொரு உயிரும் காக்கப்பட வேண்டும் என்பதே எங்கள் நோக்கம். மண்ணில் வேரூன்றி தன்னை நாடி வரும் மக்களுக்கு நிழல் தரும் எண்ணற்ற விழுதுகளைக் கொண்ட ஒரு ஆலமரம்போல், எங்கள் மருத்துவமனை தன்னை நாடிவரும் மக்களின் துயர் துடைக்கும்.

எங்கள் நவீனக் கருவிகள், வசதிகள், சிறந்த மருத்துவர்கள், மேன்மையான இரத்த வங்கி ஆகியவற்றின்மீது நம்பிக்கை வைத்து, தைரியமாக எந்த அசம்பாவித சூழ்நிலைகளிலும் நீங்கள் வரலாம். தெய்வத்திற்கு நிகரான உயிர் காக்கும் மருத்துவப் பணி செய்யும் எங்கள் பொறுப்பில் உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். நம்பிக்கை வையுங்கள், நலமாக இருங்கள்' என்றார்.



## CT ஸ்கேனில் 100 சதவீதம் தீர்வு

டாக்டர் R.ராஜராஜன், Radiologist

கே.ஜி. மருத்துவமனையில் எக்ஸ்ரே, அல்ட்ராசவுண்ட் ஸ்கேன் (USG), டிஜிட்டல் ஃப்ளோரோஸ்கோபி, C.T, MRI, இன்டர்வென்ஷனல் ரேடியாலஜி ஆகியவை உள்ளடக்கிய கதிரியக்கத் துறை சிறப்பாக செயல்பட்டு வருகிறது. இத்துறையில் 10 வருடமாகப் பணியாற்றி வரும் ரேடியாலஜிஸ்ட் டாக்டர் R.ராஜராஜன் கூறியதாவது,

'C.T. ஸ்கேன் என்பது விபத்தில் அல்லது வேறு ஏதேனும் நோயினால் பாதிக்கப்பட்டவரின் தலை முதல் பாதம் வரை உள்ள உடலின் எந்தப் பகுதியில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது என்பதை மிகவும் துல்லியமாக அறிந்து, அதற்கு ஏற்றார்போல சிகிச்சை அளிக்க உதவும்.



தலையில் அடிபட்ட ஒருவருக்கு C.T. ஸ்கேன், அதாவது MAN Scan மூலம் மூளை, தண்டுவடம், நுரையீரல் மற்றும் வயிறு பகுதிகளில் உள்ள உறுப்புகளில் (கல்லீரல், மண்ணீரல், கணையம், சிறுநீரகம் மற்றும் குடல்) அடிபட்டு இருக்கிறதா என்பதை ஒருசில நொடிகளில் கண்டுபிடிக்க முடியும். பாதிப்புகள் இருந்தால், சி.டி.ஸ்கேன் அறிக்கையின்படி அறுவைசிகிச்சை மருத்துவர்கள் உடனே சிகிச்சையைத் துவங்குவார்கள்.

இதேபோல, Non-Invasive Procedure அடிப்படையில் செய்யப்படும் சி.டி. கரோனரி ஆஞ்சியோகிராம் மூலமாக இருதயத்திற்குச் செல்லும் இரத்தக்குழாயில் எந்தளவு கொழுப்புப் படிந்து அடைப்பு ஏற்பட்டுள்ளது என்பதையும், இருதய ஓட்டை, எதிர்காலத்தில் இருதய அடைப்பு ஏற்பட வாய்ப்பு உள்ளதா என்பதையும் மிகவும் எளிதாகக் கண்டுபிடிக்க முடியும். இதில் இரண்டு வகை உள்ளது. ஒன்று, மருந்து போட முடியாதவர்களுக்கு கால்சியம் ஸ்கோரிங். அடுத்து, மருந்து கொடுத்து இ.சி.ஜி. உதவியுடன் இருதய இரத்தக்குழாய் பரிசோதனை செய்வது.

உலகளவில் அதிக இறப்புக்குக் காரணமாக இருக்கும் இருதய நோய்க்கு (Cardiovascular Disease) மிகவும் எளிதான, நோயை முன்கூட்டியே அறியும் பரிசோதனை முறை இதுவாகும். இந்தப் பரிசோதனையை 40 வயதுக்கு மேற்பட்டவர்கள், உடல் பருமன் உள்ளவர்கள், சர்க்கரை வியாதி, கொழுப்பு அதிகமுள்ளவர்கள், ஒரே இடத்தில் அதிக நேரம் உட்கார்ந்து பணிபுரிபவர்கள், பரம்பரை நோய் உள்ளவர்கள், நெஞ்சு வலியுடன் வருபவர்கள் செய்யலாம். இது மிகவும் முக்கியமான பரிசோதனையாகும்.

அடுத்து, பக்கவாதம் (Stroke). இது, இரத்த அழுத்தம், சர்க்கரை நோய், இருதய நோய் இருப்பவர்களுக்கு வருவதற்கு அதிக வாய்ப்புகள் இருக்கிறது. மூளையில் இரத்தக்கசிவு (Hemorrhagic) மற்றும் இரத்தக்குழாய் அடைப்பு (Ischemic) ஆகிய இரு காரணங்களால் பக்கவாதம் ஏற்படும். இரண்டுக்கும் வெவ்வேறு சிகிச்சை. இதற்கு சி.டி. ஸ்கேன் பரிசோதனை அடிப்படையில் நரம்பியல் மருத்துவர் சிகிச்சை அளிப்பார். ஒருவேளை C.T. ஸ்கேனில் எதுவும் தெரியவில்லை, ஆனால், நோயாளிக்கு வாய் கோணுவது, ஒருபக்கம் கை, கால்கள் பலவீனமாவது போன்ற பக்கவாத அறிகுறிக்கு MRI ஸ்கேன் மூலமாக DWI ஸ்கேன் செய்வோம்.

இதேபோல, தொடர் இருமல், உடல் எடை குறைதல், மூச்சு வாங்குதல், குழந்தைகளுக்கு நெறிகட்டுதல் போன்ற அறிகுறிகளுக்கு எக்ஸ்ரே மூலம் எந்தவிதத் தீர்வும் தெரியவில்லை, அதேநேரம் இருமலின்போது இரத்தம் வருதல், புகைபிடித்தல் பழக்கம் இருந்தால் நுரையீரல் மருத்துவர் அறிவுரையின்பேரில் C.T. ஸ்கேன் எடுப்பது நல்லது. காசநோய், ஒரு தொற்றுநோய். இதனை நுரையீரல் C.T. ஸ்கேன் மூலமாக எளிதாக மற்றும் முன்னதாகவே அறிந்துகொள்ளலாம். நுரையீரலுக்குச் செல்லும் இரத்தக் குழாயில் அடைப்பு எவ்வளவு சதவீதம் இருக்கிறது, கட்டி இருக்கிறதா, அதன் அளவு என்ன என்பதையும் எளிதாகக் கண்டறியலாம்.

திருமணமான பெண்களுக்கு திடீரென ஏற்படும் தாங்க முடியாத வயிற்று வலி ஏற்படும். வயிற்று வலிக்குப் பல காரணங்கள் உள்ளன. பெண்கள் எனும்போது கூடுதல் காரணங்கள் இருக்கும். கர்ப்பம் எனில் கரு எங்கு இருக்கிறது, சிறுநீரகக்கல் இருக்கிறதா, அது எங்கே இருக்கிறது, பித்தப்பையில் கல், வீக்கம், கணைய வீக்கம் இருக்கிறதா என்பதையும், வயிற்றில் உள்ள கட்டி, பெருங்குடல் நோய்கள் போன்றவற்றையும் C.T. ஸ்கேன் மூலமாக உறுதியாக, தெளிவாகக் கண்டறிய முடியும்.



அல்ட்ராசவுண்ட் ஸ்கேனில் 80 சதவீதமும், CT ஸ்கேனில் 100 சதவீதமும் நோய் காரணிகளைக் கண்டறியலாம்.

பல்வேறு நோய்களுக்கு C.T. ஸ்கேன் மூலம் சிறப்பான முறையில் எங்கள் மருத்துவமனையில் நோயைக் கண்டறிந்து பின்னர் சிகிச்சை அளித்து வருகிறோம்' என்றார்.

## நோயாளியின் வாழ்க்கைத் தரம் உயரும்

டாக்டர் S.சபரீஷ், Interventional Radiologist



இன்றைய நவீன மருத்துவ உலகில் நமது உயிர் மற்றும் உடல் உறுப்புகளைக் காக்கும் புதிய மருத்துவ முறையான இன்டர்வென்ஷனல் ரேடியாலஜி குறித்து கே.ஜி. மருத்துவமனையின் Interventional Radiologist டாக்டர் S.சபரீஷ் கூறியதாவது,

'கதிரியக்கவியல் (Radiology) என்பது அல்ட்ராசவுண்ட், C.T., M.R.I. போன்ற ஸ்கேன்கள் மூலம் தலை முதல் பாதம் வரை ஏற்படக்கூடிய பிரச்னைகளைக் கண்டறிவது. இன்டர்வென்ஷனல் ரேடியாலஜி என்பது, ரேடியாலஜி மூலம் கண்டறிந்த பிரச்னைகளுக்குத் தீர்வு வழங்கி நோயை முழுமையாக குணப்படுத்துவது.

இன்டர்வென்ஷனல் ரேடியாலஜி சிகிச்சையின் மூலம் இரத்தக்குழாய் சம்பந்தப்பட்ட பிரச்னைகள், கேன்சர் கட்டிகள், போன்ற நோய்களுக்குத் தீர்வு காணப்படுகிறது.

மூளையில் இரத்தக்கசிவு, இரத்தக்குழாய் அடைப்பு ஆகிய இருவகை பக்கவாதம் ஏற்படும். அவர்களுக்குத் தலைச்சுற்றல், மயக்கம், தலையில் சுத்தியால் தாக்கியதுபோன்ற வலி ஏற்படும். ஸ்கேன் அறிக்கைப்படி, இரத்தக்கசிவு எப்படி வந்தது என முதலில் ஆய்வு செய்வோம். பின்னர் இருதய அடைப்பிற்கு ஆஞ்சியோ செய்வது போலவே, கை அல்லது தொடைப் பகுதியில் ஊசி மூலம் ஒரு பிளாஸ்டிக் ட்யூப் செலுத்தி, கழுத்துப்பகுதியில் பொருத்தி மூளைக்குள் நேரடியாக செரிபரல் ஆஞ்சியோகிராம் செய்வோம். இதன்மூலம் இரத்தக்கசிவிற்கு காரணமான குழாய் உப்பி வெடித்து இருப்பது தெரியும்.

அதனைத் தற்போது எளிதாக அறுவைசிகிச்சையின்றி இன்டர்வென்ஷனல் ரேடியாலஜி தொழில்நுட்பத்தின் மூலம் உப்பியிருக்கும் இரத்தக்குழாயை சரிசெய்து விடுவோம். இந்த சிகிச்சை 4 முதல் 5 மணி நேரங்களிலே முடிந்துவிடுவதால் நோயாளிகள் மருத்துவமனையில் நாட்கணக்கில் தங்க வேண்டிய அவசியம் இல்லை. அடைப்பு நீக்கிய 5 நிமிடத்தில் அவர்களுக்கு மீண்டும் பழைய நிலை திரும்பும். கை, கால் அசையும், பேச்சு வரும்.

கழுத்துப்பக்கம் இருக்கும் இரத்தக்குழாய் அடைப்பு, பக்கவாதத்திற்கான மற்றுமொரு காரணமாகும். இதற்கு, சர்க்கரை நோய், இரத்த அழுத்தம், புகைப்பிடித்தல், உடல் பருமன் காரணமாகும். இதனால் மூளைக்குச் செல்லும் முக்கியமான இரத்தக் குழாய் கழுத்துப் பகுதியில் அடைப்பட்டு, அங்கே இரத்த ஓட்டம் முழுவதும் இருக்காது. தலைச்சுற்றல், கண் இருட்டிக்கொண்டு வருவது போன்றவை இதன் அறிகுறிகள் ஆகும். நம் உடல் எப்போதும் இதுபோன்று நமக்கு முன்னெச்சரிக்கை செய்யும். அதனை நாம் கவனித்தால் போதும். பல நோய்கள் தீர்ந்துவிடும். இந்த இரத்தக்குழாயின் அடைப்பை சின்ன ஸ்டென்ட் வைத்து நீக்கிவிடுவோம். இதற்கு கரோட்டிட் ஸ்டென்டிங் என்று பெயர். இவர்களுக்கு மீண்டும் பக்கவாதம் வராது. ஒரே ஒரு மாத்திரை மட்டும் எடுத்துவந்தால் போதும். இதுதான் கே.ஜி.மருத்துவமனையில் செய்யப்படும் அதிநவீன Neuro Intervention.

சில காலங்களுக்கு முன்னர், ஸ்ட்ரோக் வந்து 4 முதல் 5 மணி நேரத்திற்குள் மருத்துவமனை வர வேண்டும். தற்போதைய மருத்துவ வளர்ச்சியில் 24 மணி நேரத்திற்குள் வந்தால்கூட இன்டர்வென்ஷனல் ரேடியாலஜி மூலம் நல்ல சிகிச்சை பெற முடியும். பெண்களுக்கு பிரசவம் முடிந்தபிறகு, கருப்பை கிரிக்கெட் பந்துபோல சுருங்க வேண்டும். அப்படி சுருங்காத நிலைக்கு யூட்ரஸ் அடோனி என்று பெயர். இதனால் அங்கேயுள்ள இரத்தக்குழாய் திறந்து அதிக இரத்தப்போக்கு ஏற்பட்டு சிலர் இறக்கவும் நேரிடுகிறது. இதற்கு கருப்பை நீக்கம் மட்டுமே முன்னர் ஒரே தீர்வாக இருந்தது.

இப்போது அதற்கு அவசியம் இல்லை. தொடைப் பகுதியில் சிறு ஊசி மூலம் கருப்பையின் இரண்டு இரத்தநாளங்களை அடைத்து உள்ளேயே சரி செய்யலாம். இதனால் இரத்தப்போக்கு சில நிமிடங்களில் நிற்கும். பின்னர் அவர்கள் மீண்டும் கருத்தரிக்கவும் முடியும்.

மாதவிடாய் காலங்களில் அதிக இரத்தப்போக்கு ஏற்படும். காரணம், கர்ப்பப்பையில் உள்ள பெரிய கட்டி. அந்தக் கட்டியை சிறு ட்யூப் மூலம் fibroids எனும் கட்டிகளுக்குச் செல்லும் இரத்தக் குழாயை அடைத்துவிடுவதனால் கட்டிகள் சுருங்கி காணாமல் போய்விடும். இதனால் பெண்கள் கருப்பை இழப்பது தவிர்க்கப்படுகிறது.

சர்க்கரை நோயினால் காலில் ஏற்படும் இரத்தக்குழாய் அடைப்பை ஆஞ்சியோகிராம் செய்து, குறிப்பிட்ட இரத்தக்குழாயில் உள்ள சுருக்கம், அடைப்பை சிறு கம்பி வழியே திறந்து பலூன் போட்டுவிடுவோம். இதனால் புண்கள் ஆறி, கால்களை இழக்க வேண்டியதில்லை. இதன்மூலம் நோயாளியின் வாழ்க்கைத் தரம் உயரும். கால் எடுத்தால் அவருக்கு 5 வருடம்தான் வாழ்க்கை. இந்நிலையைத் தவிர்ப்பதுதான் Peripheral Angioplasty.

கல்லீரல் புற்றுநோய் போன்ற பெரிய பெரிய நோய்களுக்கும் வெளியே இருந்து சிறு ட்யூப் மூலம் புற்றுநோய் கட்டிகளை அல்லது இரத்தக்குழாயை அடைத்து விடுவோம். ஹீமோதெரபியும் செய்வோம்.

இதுபோல், இருதயத்தில் இருந்து வரும் முக்கியமான இரத்தக்குழாய் அயோட்டாவில் ஏற்படும் சிறு கீறலுக்கு ஸ்டென்ட் போட்டுத் தீர்வளிப்பது; உடம்பில் ஏற்பட்ட சீல்கட்டியை அறுவைசிகிச்சை இன்றி எடுப்பது; உடைந்துபோன முதுகெலும்பிற்குள் சென்று சிமென்ட் போட்டு சரி செய்வது எனத் தலை முதல் பாதம் வரை தேவைப்படும் இடங்களில் எல்லாம் இன்டர்வென்ஷனல் ரேடியாலஜி மூலம் சிகிச்சை அளித்து உடல் பாகங்கள் மற்றும் உயிர் காக்கப்படுகிறது.

நோயாளிக்கு அறிகுறி ஆரம்பித்து ஒரு மணிநேரத்தில் மருத்துவமனை வந்துவிட்டால், இன்டெர்வென்சனல் சிகிச்சை முறை செய்யப்படும். கேத் லேப்பில் மூளைக்குப் போகும் இரத்தக் குழாயில் இருக்கும் இரத்தக்கட்டியை thrombosuction கருவி மூலம் நீக்கி, உடனடியாக இரத்த ஓட்டத்தை சீராக்கி, கை, கால் பழையபடி செயலாற்றும்படி செய்யலாம்.

அடுத்து, வெரிகோஸ் வெயினிலும் சிறு ஊசி வழியே க்லு போட்டு அடைத்துவிடுவோம். இதனால் அறுவைசிகிச்சைக்கு அவசியம் இல்லை. 5 நிமிடத்தில் சிகிச்சை முடிந்துவிடும். மருத்துவச் செலவும் குறைவு. 2வது நாளில் நோயாளி வீட்டுக்குப் போகலாம். 3வது நாளில் வேலைக்குச் செல்லலாம். வலியும் குறைவு. சிறு துளையின் மூலம் செய்யப்படும் இந்த Pinhole or Daycare சிகிச்சை முறை நோயாளிகளுக்கு ஏற்ற சிறப்பான சிகிச்சை முறை' என்றார்.

## கருப்பைவாய் மற்றும் மார்பகப் புற்றுநோயை எளிதில் கண்டறியலாம்

Dr.சந்திரகலாமாறன் மகளிர் மற்றும் மகப்பேறு மருத்துவர்

உலகளவில் பெண்களை அதிகமாக பாதிக்கக்கூடிய புற்றுநோய்களில் முதல் இடத்தில் மார்பகப் புற்றுநோயும், இரண்டாம் இடத்தில் கருப்பை புற்றுநோயும் உள்ளன. கருப்பைவாய் புற்றுநோய் குறித்து கே.ஜி. மருத்துவமனையின் மகளிர் மற்றும் மகப்பேறு மருத்துவர் சந்திரகலாமாறன் கூறியதாவது,

'பெண்களின் கர்ப்பப்பைக்கும், யோனிக்கும் இடையில் காணப்படும் ஒரு சிறிய வாய் பகுதியைத்தான் கருப்பைவாய் (Cervix) என்கிறோம். இங்கு ஏற்படும் புற்றுநோய்தான் கருப்பைவாய் புற்றுநோய் எனப்படுகிறது. HPV (Human Papilloma Virus) என்னும் ஒருவகை வைரஸால்தான் 99.9% இந்நோய் ஏற்படுகிறது.



பெரும்பாலும் இந்நோயினால் பாதிக்கப்படுபவர்கள், இளம் வயதில் திருமணம் செய்பவர்கள் அல்லது இளம்வயதில் பாலுறவில் ஈடுபடுபவர்கள் மற்றும் உறவின்போது சரியான சுகாதார முறைகளை மேற்கொள்ளாத பெண்கள், இளம் வயதில் அடிக்கடி கருக்கலைப்பு செய்தவர்கள், அதிகக் குழந்தைகள் பெற்றுக்கொள்பவர்கள், பலருடன், குறிப்பாக எச்.ஐ.வி. பாதித்தவர்களுடன் உறவு கொண்டவர்களுக்கு இந்நோய் பாதிப்பு அதிகம். மேலும், திருமணம் முடிந்து ஆண், பெண் சேர்க்கை தொடங்கி 5 வருடங்கள் கழித்தும் பெண்களின் கருப்பை மூலம் இந்த ஹியூமன் பாப்பிலோமா வைரஸ் பரவுகிறது.

இப்புற்றுநோயைக் கண்டறிய பாப்ஸ்மியர், கால்போஸ்கோபி மற்றும் பயாப்சி போன்ற எளிய பரிசோதனைகளை திருமணம் முடிந்த மூன்று வருடங்களில் செய்யலாம். வெள்ளைப்படுதல், அதிக இரத்தப்போக்கு போன்ற பிரச்னைகளுக்காக மகளிர் மருத்துவரை அணுகும்போது, அவர் மூலம் பாப்ஸ்மியர் பரிசோதனை 5 நிமிடங்களில் மேற்கொள்ளப்படும்.

திருமணமாகி 4 அல்லது 5 வருடங்களாகிய வேறு எந்தவிதமான பிரச்னைகளும் இல்லாத பெண்களும், 65 வயது வரை உள்ள பெண்களும் இந்த பரிசோதனையை செய்துகொள்ளலாம். அறிகுறிகள் இல்லையென்றாலும் ஆரம்பத்தில் மூன்று வருடத்திற்கு ஒருமுறை என பரிசோதனை செய்துகொள்ளலாம்.

மாதவிடாய் இல்லாத இந்த பரிசோதனை நேரத்தில் உறவுக்குப் பின் இரத்தப்போக்கு ஏற்படுதல், அதிக வெள்ளைப்படுதல், அதில் துர்நாற்றம், தொடர் அடிவயிறு வலி, இடுப்பு வலி, உடல் எடை குறைதல், சிறுநீர் மற்றும் மலம் கழிக்கும்போது பிரச்னைகள் போன்ற அறிகுறிகள் இருந்தால் உடனடியாக மருத்துவமனைக்குச் சென்று பரிசோதனை செய்து, இந்த நோய் வருவதற்கான வாய்ப்பு உள்ளதா என்பதைக் கண்டறியலாம்.

புற்றுநோய்க்கான அறிகுறிகள் தோன்றும் வரை பெண்கள் காத்திருக்கக் கூடாது. 30 வயதிற்கும் மேற்பட்ட பெண்கள் தாங்களாகவே முன்வந்து இதற்கான பரிசோதனைகளை மேற்கொள்ள வேண்டும். 10 வருடங்களுக்கு முன்னரே வரக்கூடிய புற்றுநோயை இந்த எளிய பாப்ஸ்மியர் பரிசோதனை மூலம் கண்டுபிடித்துவிடலாம்.

ஒருவேளை நோய் இருப்பது தெரிந்தால் முதல் நிலை மற்றும் இரண்டாம் நிலையின் ஆரம்ப கட்டத்தில் அறுவைசிகிச்சை அல்லது ரேடியோதெரபி சிகிச்சை மூலம் 100 சதவீதம் குணமாக்கிவிடலாம். எங்கள் கே.ஜி. மருத்துவமனையில் இதற்கு சிறப்பு சிகிச்சை அளிக்கிறோம்.

கே.ஜி. மருத்துவமனை வரும் அனைத்துப் பெண்களுக்கும் இந்த பாப்ஸ்மியர் பரிசோதனை மட்டுமின்றி, மார்பகப் புற்றுநோயை எளிதாக வலியில்லாமல் மெமோகிராம் பரிசோதனை மூலம் கண்டறிந்து சிறந்த முறையில் சிகிச்சை அளித்து வருகிறோம்' என்றார்.

## கருத்தரிப்பை சுலபமாக்கும் எளிய பரிசோதனைகள்

Dr. B.மகாலட்சுமி மகளிர் மற்றும் மகப்பேறு மருத்துவர்

கருத்தரிப்பு என்பது ஒரு குடும்பத்தின் தொடர்ச்சியையும் மனிதப் பரிணாம வளர்ச்சியின் தொடர் சங்கிலியையும் வேரறுக்காமல் காத்திடும் இயற்கையின் வரமாகும். இந்த வரம், நாகரிகத்தின் வளர்ச்சியால் தடைபடுவது சாபமாகும். இதற்கு ஒரு தீர்வு சொல்லும் வகையில் கணபதியில் உள்ள கே.ஜி. சிறப்பு மருத்துவமனை மகளிர் மற்றும் மகப்பேறு மருத்துவர் B.மகாலட்சுமி கூறியதாவது,

'ஒரு தம்பதியினர் திருமணமாகி முதல் 12 முதல் 18 மாதங்கள் வரை எதையும் எதிர்பார்க்காமல், பாதுகாப்பு முன்னேற்பாடுகள் தவிர்த்து, மன உளைச்சல் இன்றி, இரவுப்பணி, தொடர் பயணம் மேற்கொள்ளும் பணி எனப் பல வாழ்வியல் இடையூறுகள் இன்றி வாழ வேண்டும். இவ்வாறு அவர்கள் வாழ்ந்து அதன்பிறகும் அவர்களுக்கு குழந்தை பிறக்கவில்லை எனில், அப்போதுதான் அவர்கள் மருத்துவரை அணுக வேண்டும்.

ஆனால் தற்போது திருமணமாகி ஒரு சில மாதங்களிலேயே கருத்தரிக்க வேண்டும் என்கிற நிர்பந்த நிலை, கவலை 50 சதவீத இளம்தம்பதிக்கு இருக்கிறது. இந்த கட்டாய சூழ்நிலை, இருவருக்கும் உள்ளம், உடல் இரண்டிலும் இரணத்தை உருவாக்குகிறது. இதுவும் குழந்தை தாமதத்திற்கு கூடுதல் காரணமாகும். குழந்தைப்பேறு உண்டாக முதலில், பெண்ணுக்கு அல்ட்ராசவுண்ட் ஸ்கேன் எடுக்க வேண்டும். இந்த சோதனையில், கர்ப்பப்பையில் ஏதாவது கட்டிகள் இருக்கிறதா, சினைப்பையில் நீர்க்கட்டிகள் இருக்கிறதா (PCOD) என்று தெரிந்துகொள்ளலாம். மேலும், பெண்ணுக்கு தைராய்டு, இரத்தசோகை போன்ற பிரச்னைகள் இருந்தால், 3 முதல் 6 மாதங்கள் சிகிச்சை பெற வேண்டும்.

அடுத்த சிகிச்சை முறை Follicular Study. மாதவிடாய் ஆகி 3, 5, 7, 9, 11, 15 ஆவது நாட்களில் குறிப்பிட்ட இடைவெளியில் இதனைக் கட்டாயம் எடுக்க வேண்டும். இதன்மூலம் கர்ப்பப்பை உள்ளே நடக்கக்கூடியவற்றை தெளிவாகத் தெரிந்து கொள்ளலாம். சாதாரண ஸ்கேனில், கர்ப்பப்பை, சினைப்பைகள் எவ்வாறு இருக்கின்றன என்பதை அறியலாம். ஆனால், இந்த ஸ்கேனில் ஒவ்வொரு மாதமும் சினைமுட்டை வளர்ச்சி சரியாக இருக்கிறதா என்று அறியலாம்.



சினைமுட்டை வெடித்தால் கரு உருவாகும், அல்லது மாதவிடாய் ஆகும். இதுதான் இயற்கை. இந்த நிகழ்வு இயல்பாக நடக்கிறதா என்பதை இந்த சிகிச்சை மூலம் அறிவதுடன், அந்தப் பெண்ணுக்கே கணினி உதவியுடன் இதைத் தெரியப்படுத்தலாம். அத்துடன், இந்த நாளில் கரு முட்டை வெடிக்கவுள்ளது, அப்போது நீங்கள் கணவருடன் சேர்ந்திருந்தால் கரு தங்கும் என்பதை அறிவியல் ரீதியாக ஆதாரப்பூர்வமாக உறுதியாக சொல்லலாம். குழந்தையின்மை என்று சொல்லக்கூடிய பெண்களுக்கு இது ஒரு வரப்பிரசாதம்.

அடுத்து, ஹார்மோன் பரிசோதனை. இதுவும் மாதவிடாய் காலத்தில் செய்யக்கூடியதே. இதன்மூலம் சினைப்பைக் கோளாறுகள் இருந்தால் கண்டறிந்து அதனையும் சரி செய்துகொள்ளலாம்.

இதற்கடுத்து, HSG (Hystero salpingography). மேற்குறிப்பிட்ட பரிசோதனைகள் செய்து அவற்றில் முடிவுகள் சரியாக இருந்து, 2 அல்லது 3 வருடங்கள் ஆகியும் கருத்தரிக்கவில்லை எனில், மாதவிடாய் முடிந்து முதல் வாரத்தில் செய்யக்கூடிய இந்த இறுதி எக்ஸ்ரே பரிசோதனை ஒருசில பெண்களுக்கு வரப்பிரசாதமே. கர்ப்பப்பை, சினைப்பை ஆகியவற்றைத் தாண்டி கருக்குழாய் குறித்து அறிய உதவும் ஒரு ஸ்கேன் இது. இந்த சோதனையில், கருக்குழாய் அடைப்பு, கர்ப்பப்பையில் உள்ள பிறவிக் கோளாறுகள், கர்ப்பவாயில் பலமின்மை போன்றவற்றைத் தெளிவாக எக்ஸ்ரே படத்துடன் கண்டறியலாம்.

ஆண்களுக்கென்று செய்யக்கூடிய ஒரே ஒரு பரிசோதனை, விந்தணு பரிசோதனை (Seminal Analysis) மட்டுமே. இதில், ஒரு மில்லிலிட்டர் (1 ml) விந்தணுவில் 15 மில்லியனுக்கு மேல் உயிரணுக்கள் இருக்கிறது, அதன் நகரும் வேகம் (motility) 30 சதவீதத்திற்கும் மேல் உள்ளது எனில், கருத்தரிப்புக்கு என வேறு எந்த பரிசோதனையும் எடுக்கத் தேவையில்லை. ஒருவேளை ஏதாவது ஒரு குறைபாடு இருந்தால், அவர்களுக்கு ஹார்மோன் பரிசோதனை, ஸ்கேன் போன்றவை தேவை.

எனவே, கருத்தரிப்பு என்பது புரியாத புதிர் அல்ல. இந்த பரிசோதனைகளை மாதம் ஒருமுறை மேற்கொண்டு பொறுமை, தன்னம்பிக்கையுடன், தைரியமாக இருந்தால் குழந்தை பாக்கியம் எல்லோருக்கும் கிடைக்கும்.

இறுதித் தகவல், Unexplained Infertility. அனைத்து சோதனை களையும் செய்து, 10 வருடம் ஆகியும் குழந்தை இல்லை என்பதையே இந்த விவரிக்கப்படாத கருவுறாமை குறிப்பிடுகிறது. இந்நிலை 100க்கு 10 அல்லது 20 பேருக்குத்தான் வரும். இவர்களுக்குத்தான் IVF மற்றும் உயர்ரக மருத்துவப் பரிசோதனைகள் பரிந்துரைக்கப்படுகிறது' என்றார்.

## ELGi reports 32.9% strong Standalone Profit growth

✍ The Covai Mail

For the quarter that ended March 31, 2023, Tamil Nadu based air compressor manufacturer ELGi Equipments Ltd., reported a significant increase in standalone profit after tax. The organization recorded a benefit of Rs 80.63 Crore, denoting a development of 32.9% contrasted with the comparing quarter of the earlier year, where the benefit was Rs 60.64 Crore.

The standalone profit after tax increased by 43.9% to Rs 272.48 Crore for the fiscal year that ended March 31, 2023, up from Rs 189.35 Crore the year before. The sale of a subsidiary's property in the United States, Patton's Inc., nets the company a profit of Rs 77.45 Crore for the quarter and year.

The standalone total income increased to Rs 476.8 Crore during the quarter, up from Rs 466.3 Crore in the preceding quarter. The standalone total income for the entire fiscal year was Rs 1,839.9 Crore, down from Rs 1,628.2 Crore the year before.

For the fiscal years 2022 and 2023, the board of directors has recommended a dividend of Rs 2 per share, or 20%, subject to shareholder approval.

## Amway's Artistry Skin Nutrition: Hydrating Youthful Skin

✍ The Covai Mail

Amway India, an FMCG Direct Selling company, has launched products that transcend the skin care needs of all. The balancing and hydrating ranges introduced by Artistry Skin Nutrition are enriched with plant-based botanicals from Nutrilite farms, the hydrating and balancing ranges are clinically tested vegan skincare lines, with no animal testing and free from parabens, phthalates, sulfate surfactants and animal-derived ingredients.

Powered by cutting-edge skin science these ranges are infused with exclusive Skincare Complex that boosts skin's natural defence system by 350% to help delay the visible signs of ageing.

Ranging from Rs 1700 to Rs. 3300, the Artistry Skin Nutrition balancing and hydrating solution set is sold exclusively by Amway Direct Selling Partners across India.

## Airtel surpasses 2 Million 5G users in Tamil Nadu

✍ The Covai Mail

Bharti Airtel has crossed 2 million unique 5G users in Tamil Nadu, where it was the first to launch 5G in India. The service is now available in over 500 cities and towns, connecting railway stations, bus terminals, highways, and business hubs. Nationally, Airtel's 5G Plus has surpassed 10 million users across 3,500 towns and villages.

Airtel aims to expand coverage to all towns and key rural areas by September 2023. To enhance the experience, Airtel has introduced unlimited 5G data, removing data caps across plans.

To Advertise in
THE COVAI MAIL
84898 12341
84895 12341
covaimailads@gmail.com
report2tcm@gmail.com

THE COVAI MAIL

**Disclaimer:** The readers are advised to check with the authenticity of the organisations that are advertising in our newspaper before taking action in any way. The Owner and Publisher of this newspaper are not in any way responsible for the genuineness of the advertisements / advertisers and their products and services. If anybody suffers a loss or damage because of the advertisements published in this newspaper, then the owner, publisher, printer, editor and employees can be responsible under no circumstance as stated earlier.

# High Electricity Charge, Low Government Support!

**- SISPA**

✍ The Covai Mail



*Arul Mozhi, President- OSMA, Jagadish Chandran, Secretary- SISPA, Subramaniam, Head- ISMA and Jayapal, Head - RTF in the press meet to address their concern about the current situation of the spinning mills.*

The South India Spinners Association (SISPA), Indian Spinning Mills Association (ISMA), Open End Spinning Mills Association (OSMA) and Recycle Textile Federation (RTF) organized a meeting to address their concern about the current situation of the spinning mills to the Government. This meeting was held at the Indian Chamber of Commerce Hall, Coimbatore in the presence of Arul Mozhi, President- OSMA, Jagadish Chandran, Secretary- SISPA, Subramaniam, Head- ISMA and Jayapal, Head- RTF.

"Spinning mills in the textile industry are in crisis due to factors such as global economic recession and low yarn prices due to unrestricted imports.

This results in cash losses, low capacity utilization, and threatens the sustainability of the spinning industry in Tamil Nadu and it becomes non-competitive compared to other states and so we're going to stop 50% of spinning mills' production," said Jagadeesan, Secretary of SISPA.

The office bearers stressed that the current situation is worsened by increased bank interest rates by 3%, rising electricity tariffs, repayment burdens from short-term loans disbursed by the Government during the pandemic, inflation of costs, and higher production costs compared to other international manufacturers.

"Spinning mills are struggling to repay bank loans and may become non-performing assets (NPAs), affecting both the mills and banks. These issues were mainly because of the import of yarn for the lowest price from the countries like Bangladesh, China and Vietnam. There is a difference of 5 to 6 rupees between that imported yarn and our country's own yarn", the officials said.

They appealed to the Government of India that they should allow yarn imports only when local suppliers could not meet the demand. "The competition is already tough among the local suppliers and by allowing imports, many units may be forced to shut down", they said. They also requested to support self-reliance and Make in India initiatives.

Their appeals to the Government of Tamil Nadu include revising electricity charges to 5.6%, loan restructuring, providing fresh loans with extended repayment periods, reducing bank interest rates to the previous level of 7.75%, promoting green energy with subsidies, abolishing rooftop solar network charges, and reverting demand charges to previous rates.

They emphasized that failure to address these demands could lead to job losses, revenue decline, and permanent closure of MSME Spinning mills, and also severely impacting workers' livelihoods and the economy.

## Air India Group spreads wings to operate special Haj flights

✍ The Covai Mail

Air India and Air India Express will fly close to 19,000 pilgrims to Jeddah and Medina in Saudi Arabia from four Indian cities. The Haj operations began with Air India's flight AI5451 departing from Jaipur International Airport and arriving in Medina.

Air India will operate 46 flights from Jaipur to Medina and Chennai to Jeddah, from May 21st to June 21st, 2023. In the second phase, Air India will bring back pilgrims from Jeddah and Medina to Jaipur and Chennai, operating 43 flights from July 3rd to August 2nd, 2023. A total of 10,318 passengers will be flown by Air India using Boeing 787 and Airbus 321neo aircraft.

Air India Express will use its B737-800 aircraft to operate 57 flights from Kozhikode and Kannur to Jeddah during the first phase, carrying a total of 8,236 passengers. In the second phase, from July 13th to August 2nd, 2023, Air India Express will transport pilgrims from Medina back to Kozhikode and Kannur.

## DBS announced deadline for Grant Award applications

✍ The Covai Mail

DBS Foundation has announced the 'Business for Impact Grant Award 2023', which aims to support social enterprises and Small-and-Medium Enterprises (SMEs) working on innovative solutions to address social and environmental issues. The award, now in its ninth year, recognizes and promotes businesses that successfully integrate social/environmental impact and financial profit into their models for long-term growth. The deadline for applications is June 15, 2023.

Three Indian startups - Neomotion Assistive Solutions, Saathi Eco Innovations, and Urdhvam Environmental Technologies - were among the recipients of the grant.

In addition to funding, awardees gain access to DBS resources, including preferential banking packages, skills-building and mentorship programs. This comprehensive support has helped previous awardees accelerate their growth, enhance operational capacity, expand into new markets, and deepen their social and environmental impact.

## ASBM and EKarub forge strategic alliance



*Sundarapandiyan Natarajan Director of ASBM and Senthil Kumar, Managing Partner of EKarub signed an MoU at their office premises.*

✍ The Covai Mail

Adithya School of Business Management (ASBM), Coimbatore and EKarub signed an MoU recently at their office premises. Er. Sukumaran, Chairman of Adithya Institutions, expressed his congratulations on the partnership efforts.

Senthil Kumar, Managing Partner of EKarub, and Sundarapandiyan Natarajan, Professor and Director of ASBM discussed and finalized various collaborative initiatives such as Financial Training, Stock Trade Practical sessions, Management Development Programs (MDPs), as well as Employee and Faculty Training. The collaboration also extends to Corporate Placements and Internships, providing valuable opportunities for students.

This signing ceremony was witnessed by Krishnaveni, an Assistant Professor, along with Mohamed Mohideen and Hari Vikram, students from both institutions.

## SaiU offers Innovative combo courses

✍ The Covai Mail



*Prof. Jamshed Bharucha, Vice-Chancellor of Sai University addressing the courses available in SAI University*

Sai University Chennai (SaiU) is paving the path for liberal education in India, offering interdisciplinary and multidisciplinary undergraduate programs in arts, science, technology, and law. As one of the country's first international universities to embrace the National Education Policy (NEP) 2020's vision, SaiU aims to empower students through a holistic approach to learning.

Founder and Chancellor, Ramani, emphasized the importance of an interdisciplinary liberal education model in today's AI-driven era. Tech companies are seeking young talent with diverse skills, and Sai University provides just that through its faculty composition.

With 30% international faculty from renowned institutions like Stanford and Harvard and 70% Indian faculty who are esteemed alumni of global institutions, SaiU ensures a well-rounded education for its students.

Vice-Chancellor, Prof. Jamshed Bharucha, highlighted the limitations of conventional education systems and their failure to equip graduates with the necessary skills for employability. SaiU's "Spark the Imagination and Liberate the Mind" approach encourages students to transcend the confines of rote learning and explore various disciplines.

To engage with prospective students, parents, and current applicants, Sai University organized an event in Coimbatore.

Attendees had the opportunity to connect with the Chancellor, Vice-Chancellor, and Faculty to gain insights into the liberal education curriculum, undergraduate programs, and student life at SaiU.

## CSR Nursing Home Celebrates 30 Years of Quality Healthcare

✍ The Covai Mail





*Dr.CSR Kumar, the Chairman of CSR Nursing Home and Dr.Sooraj Kumar, Director of CSR Nursing Home*

CSR Nursing Home, founded in 1993, celebrated 30 years of providing quality healthcare in Coimbatore. The hospital has grown from a 10-bedded small center to a 75-bedded multi-speciality center, offering advanced facilities.

Dr.Ragoothaman, the Founder of CSR Groups, expressed his pride in the hospital's achievements by saying, "We started with a small center at Athinyur way back in 1960s. The growth the hospital has attained gives us an extra boost of confidence from the public that our work is being recognised and has helped the vast majority of society".

Dr.CSR Kumar, the Chairman of CSR Nursing Home, commended the doctors, visiting consultants, staff, and patrons of CSR Groups for their tireless dedication over the past 30 years.

Dr.Rajini Kumar, the Medical Director of CSR Groups, highlighted the features available in the center such as a 16-bedded ICU, 2 Operation Theatres, a Cardiac and Vascular Cath lab, a 6-bedded Emergency Unit, and a 64-slice CT scan. She attributed their success to their philosophy of delivering the best quality care at any time of the day, ensuring affordability for all.

Looking ahead, the team at CSR Nursing Home has unveiled their ambitious dream of expanding to a 250-bedded multi-speciality center.

They aim to establish a chain of Sub Speciality Centers in the peripheries, providing better access to quality healthcare for the public.

## CDBA Gears Up for All India Basketball Tournaments

✍ The Covai Mail


Coimbatore District Basketball Association (CDBA) hosted the highly anticipated All India Basketball Tournament for Men and Women, showcasing the country's top basketball teams. With a rich history spanning 55 years for the Men's tournament and 19 years for the Women's tournament, this event has become a symbol of basketball excellence.

The event commenced on the evening of May 27th, 2023, at the V.O.C. Park Basketball Court and will continue till June 1st, 2023. The teams will compete on a league basis until May 30th, leading up to the Semi-Finals on May 31st and the Finals on June 1st. All matches will be held from 5:00 pm to 9:00 pm, and spectators can attend the games free of charge.

The inaugural function was graced by Balakrishnan, Commissioner of Police, Coimbatore City, as the Chief Guest. Selvaraj, President of CDBA and Joint Managing Director of C.R.I. Group, served as the Guest of Honour and presided over the ceremony. Ten renowned teams have been selected to participate in the Men's tournament, including powerhouses such as Lonavala - Indian Navy, New Delhi - Indian Air Force, New Delhi – Indian Railways, Banglore – Bank of Baroda, Trivandrum- Kerala Police, Chennai – Indian Bank, Chennai- Income Tax, and Chennai - Tamilnadu Basketball Association, among others.

Meanwhile, the Women's tournament features eight competitive teams, including Trivandrum - Kerala State Electricity Board (KSEB), Chennai - Tamilnadu Basketball Association-TRW and Chhattisgarh - SAI.

The winning teams will not only secure prestigious titles but will also be awarded significant cash prizes. The victorious Men's team will receive Rs. 1,00,000 along with the Nachimuthu Gounder Cup, while the Women's champion will be awarded Rs. 50,000 and the C.R.I. Pumps Trophy. Runners-up and second runners-up in both categories will also receive substantial cash prizes and trophies.



# Cultivate Trustworthiness, Thoughtfulness, and Gratitude

**- Dharani Karthikeyan,** *Vice-President of SAP Labs India*

✍ **The Covai Mail**

PSG Institute of Technology and Applied Research (PSG iTech) celebrated its 8th Annual Day at the PSG Convention Centre, marking another milestone in the institution's journey. Dharani Karthikeyan, Vice-President of SAP Labs India, graced the event as the Chief Guest and delivered an insightful address.

Chandramohan, the Principal, presented the Annual Report for the academic year 2022-2023. The report highlighted outstanding accomplishments in research, academics, sports, and other extension activities. In his presidential address, Gopalakrishnan, Managing Trustee, congratulated the students and faculty, emphasizing the importance of regular sports participation and utilizing the campus facilities for holistic development.

Dharani Karthikeyan delivered the address focusing on the opportunities in start-ups and the transformative power of technological advancements like Artificial Intelligence, Chat GPT, and Data Analytics.

She emphasized the significance of customer-centricity in business and highlighted the importance of emotional intelligence over intelligence quotient. Dharani urged the students to be proactive, lifelong learners, and to cultivate qualities like trustworthiness, thoughtfulness, and gratitude.

The ceremony also included the presentation of awards. Hari Nandhan and Prema received the overall Best-Outgoing Student Awards in their respective categories. Department-wise best outgoing students, class toppers, faculty of the year, and supporting staff were also recognized and honoured.

Mohanram, the Secretary of PSG iTech, expressed gratitude and recapped the key highlights of the event before proposing the vote of thanks.

The successful organization of the event was credited to Manimegalai, Professor and Head of the Department of CSE, along with her dedicated team.



*The Chief Guest Dharani Karthikeyan presents the overall Best Outgoing Student Award to Hari Nandhan, student of PSG iTech*





























Reg. No. TNBIL/2014/55455. Postal Registration No: CB/123/2021-23. Owned, Published and Printed by K.C.Srinivasan and published from 5/1, Athanur Amman Kovil Street, Ganapathy, Coimbatore - 641006 and Printed at Sri Saraswathy Printers, 5/1, Athanur Amman Kovil Street, Ganapathy, Coimbatore - 641006. Editor: K.C.Srinivasan

## ஆண்களுக்காக வாக்கரூ புதிய வகை பிரீமியம் ரக காலணிகள் அறிமுகம்

✍ தி கோவை மெயில்

இந்தியாவில் காலணி தயாரிப்பு மற்றும் விற்பனையில் முன்னணி நிறுவனமாக திகழும் வாக்கரூ, ஆண்களுக்கான மிகவும் நேர்த்தியாக மற்றும் அழகாக வடிவமைக்கப்பட்ட புதிய வகை 'வாக்கரூ ப்ளஸ்' காலணிகளை அறிமுகம் செய்துள்ளது.

குறைந்த விலையில் நீண்ட நாட்கள் உழைக்கும் தன்மை, சிறந்த தரம் ஆகியவற்றுடன் நுகர்வோரின் எதிர்பார்ப்புகளை பூர்த்தி செய்யும் வகையில் இவை உள்ளன.

புதிய காலணிகள் அறிமுகம் குறித்து வாக்கரூ இன்டர்நேஷனல் நிறுவனத்தின் நிர்வாக இயக்குனர் நௌஷாத் கூறுகையில், எங்களின் புதிய வாக்கரூ ப்ளஸ், காலணித் துறையில் புதிய மாற்றத்தை ஏற்படுத்தும். மேலும் குறைந்த விலையில் பிரீமியம் ரக காலணிகளை வாங்க விரும்பும் வாடிக்கையாளர்களின் தேவைகளை இவை நிச்சயம் பூர்த்தி செய்யும். இந்த புதிய ரக காலணிகளை நாங்கள் அறிமுகம் செய்வதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறோம். இந்த புதிய ரகங்கள் வாடிக்கையாளர்களிடம் நல்ல வரவேற்பை பெறும் என்று நாங்கள் நம்புகிறோம். எங்களின் நிபுணத்துவமிக்க வடிவமைப்பு குழு ஒவ்வொரு காலணியையும் மிகுந்த கவனத்துடன் மிகவும் நுணுக்கமாக வடிவமைத்துள்ளது, அத்துடன் இவை நீடித்து உழைக்கும் தன்மை கொண்டவையாக இருக்கும் என்று தெரிவித்தார்.

## மாணவர்கள், ஆசிரியர்களின் திறமைகளை பதிவேற்ற சமூக வலைதளம் உருவாக்கம்

✍ தி கோவை மெயில்

கோவை மாவட்ட கல்வித்துறை சார்பில் மாணவர்கள், ஆசிரியர்களின் திறமைகளை பதிவேற்ற, பிரத்யேக சமூக வலைதள பக்கங்கள் உருவாக்கப்பட்டுள்ளது. பள்ளிக்கல்வித்துறை சார்பில், அனைத்து மாவட்டங்களில் இருந்தும், ஆசிரியர்களுக்கு வழங்கப்படும் பயிற்சிகள், ஆசிரியர்களின் திறமைகள், கலைத் திருவிழாவில் மாணவர்களின் பங்களிப்பு ஆகியவற்றை, 'தமிழ்நாடு பள்ளிக்கல்வித்துறை' என்ற பெயரில், பேஸ் புக், இன்ஸ்டாகிராம், யூடியூப் ஆகியவற்றில் பதிவேற்றப்படுகிறது. இதனால், கிராமப்புற பள்ளி மாணவர்களின் திறமைகளும், வெளிச்சத்திற்கு வருவதோடு, அங்கீகாரம் கிடைக்கிறது.

இதை கோவை மாவட்டத்திலும் மேற்கொள்ளும் வகையில், அரசு, அரசு உதவிபெறும் பள்ளி மாணவர்களின் திறமைகளுக்கு, மேடை ஏற்படுத்தி தர, கோவை மாவட்ட கல்வித்துறை சார்பில், இன்ஸ்டாகிராம், பேஸ்புக், டுவிட்டரில் பிரத்யேக ஐ.டி., உருவாக்கப்பட்டுள்ளது.

இது குறித்து மாவட்ட முதன்மை கல்வி அதிகாரி சுமதி கூறியதாவது, பள்ளிக்கல்வித்துறை சார்பில், அரசுப்பள்ளி மாணவர்களின் நலனுக்காக, பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன. கலைதிருவிழா, வினாடி வினா, சிறார் திரைப்பட போட்டி, வானவில் மன்ற போட்டிகள் நடத்தி, மாநில அளவில் தகுதிபெறுவோர், வெளிநாடுகளுக்கு கல்வி சுற்றுலா அழைத்து செல்லப்படுகின்றனர்.

இதுபோன்ற திறமையான மாணவர்கள், ஆசிரியர்களை அங்கீகரிக்கவும், அரசுப்பள்ளிகள் மீதான கவனத்தை அதிகரிக்கவும், சமூக வலைதளங்களில் பக்கங்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

இதில், பள்ளிகளில் நடக்கும் நிகழ்வுகள், உடனடியாக பதிவேற்றப்படும். இவ்வாறு அவர் கூறினார்.

# 2024 தேர்தல்

# பாஜக ஏணியில் ஏறப்போவது யார்?

✍ **சாணக்கியன்,** தி கோவை மெயில்

2024 மக்களவைத் தேர்தலில் பாஜக எனும் ஏணியில் ஏறி தமிழகத்தில் தங்களை நிறுத்திக்கொள்ளப்போவது எடப்பாடி பழனிசாமியா அல்லது ஓ.பன்னீர்செல்வமா என்பது

இன்னும் சில மாதங்களில் தெரிந்துவிடும்.

பிரதான எதிர்கட்சியான அதிமுகவில் இபிஎஸ், ஓபிஎஸ் என இரு பிளவுகள் உருவாகி, இறுதியாக இபிஎஸ் தான் அதிமுக என மத்திய தேர்தல் ஆணையம் அங்கீகரித்துவிட்டது. இதனால் கட்சி, சின்னம் இபிஎஸ் வசம் சென்றுவிட்டன. இருப்பினும், திருச்சி மாநாட்டுக்குப்பின் அதிமுக வாக்குகளை ஓபிஎஸ் பிரிக்கக்கூடும் என்ற பார்வை எழுந்துள்ளது.

ஓபிஎஸ் டி.டி.வி.தினகரன் இணைந்து செயல்பட முடிவு செய்துள்ளதால் டெல்டா, தென்மாவட்டங்களில் முக்குலத்தோர் வாக்குகள் அவர்களிடம் ஒரு முகமாக குவியும் வாய்ப்பு உருவாகியுள்ளதால் 14 மக்களவைத் தொகுதிகளில் அதிமுகவுக்கு பலத்த சேதம் உருவாகக்கூடும் என அரசியல்நோக்கர்கள் கருதுகின்றனர். சசிகலா, தினகரன், ஓபிஎஸ் என தொடர்ந்து அதிகாரம் மிக்க பதவிகளில் இருந்த தங்கள் சமூகத்தை சேர்ந்தவர்களை ஓரங்கட்டியதால் இபிஎஸ் மீது முக்குலத்தோர் கடும் கோபத்தில் இருப்பதால் மக்களவைத் தேர்தலில் இபிஎஸ் இருக்கும் அணிக்கு எதிராகவும், ஓபிஎஸ்தினகரன் அணிக்கு ஆதரவாகவும் முக்குலத்தோர் வாக்குகள் விழக்கூடும் என்பது அரசியல் நோக்கர்களின் கணிப்பு.

இந்நிலையில், பாஜக அணியில் இருந்தால் மட்டுமே தென்மாவட்டங்களில் சரியும் செல்வாக்கை ஈடுகட்ட முடியும் என்பது இபிஎஸ் கணக்காக உள்ளது. அதற்கேற்ற அரசியல் நகர்வுகளை இபிஎஸ் செய்யத் தொடங்கியுள்ளார்.

பிற மாநிலங்களை போலவை மக்களவைத் தேர்தலில் பிரதமர் வேட்பாளரை முன்னிறுத்தியும், பேரவைத்தேர்தலில் முதல்வர் வேட்பாளரை முன்னிறுத்தியும் வாக்கு அறுவடை செய்யும் உத்தி தமிழகத்தில் இருந்து வருகிறது. அந்த வகையில், மக்களவைத் தேர்தலை பொருத்தவரை தமிழத்தில் இந்திரா காந்தி குடும்பத்துக்கு தனி செல்வாக்கு இருக்கிறது.

1980இல் திமுக கூட்டணியில் பிரதமர் வேட்பாளராக இந்திரா காந்தியை முன்னிறுத்தியபோது, அதிமுக அணியில் ஜெகஜீவன் ராமை எம்ஜிஆர் முன்னிறுத்தினார். ஆனால், எம்ஜிஆரையும் மீறி இந்திரா காந்தி தலைமைக்கு 38 தொகுதிகள் கிடைத்தன. கோபி, சிவகாசி மக்களவைத் தொகுதியில் மட்டும் தான் எம்ஜிஆருக்கு வெற்றிக் கிடைத்தது.

அதேபோல, 1989இல் கருணாநிதி, பிரதமர் வேட்பாளராக வி.பி.சிங்கை நிறுத்தியபோது, ஜெயலலிதா, ராஜீவ் காந்தியை முன்னிறுத்தி 39 தொகுதிகளில் வெற்றிப்பெற்றார். 1998, 1999 இல் வாஜ்பாயை முன்னிறுத்தி மூன்றில் இரு பங்கு தொகுதிகளை அதிமுக, திமுக வெற்றிப்பெற்றபோதும், 2004இல் சோனியா காந்தியை முன்னிறுத்தி 40 தொகுதிகளிலும் கருணாநிதி வெற்றிப்பெற்றார்.

2019இல் ராகுல் காந்தியை முன்னிறுத்தி 53 சதவீத வாக்குகளுடன் ஸ்டாலின் 39 தொகுதிகளை கைப்பற்றினார். பிரமதர் மோடியை முன்னறுத்திய அதிமுக தேனி தொகுதியில் மட்டும் தான் வெற்றிப்பெற முடிந்தது. இந்திரா காந்தி குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் பிரதமர் வேட்பாளராக முன்னிறுத்தப்படும்போது தமிழகத்தில் அந்த அணிக்கு 50 சதவீதத்துக்கு மேல் வாக்கு கிடைக்கிறது. கிட்டதட்ட 99 சதவீத வெற்றியை அந்த அணி தொடர்ந்து பெற்று வருகிறது.

எதிர்வரும் 2024 மக்களவைத் தேர்தலில் திமுக கூட்டணி மீண்டும் ராகுல் காந்தியை தான் பிரமதமர் வேட்பாளராக முன்னிறுத்தும் வாய்ப்பு அதிகம். இந்நிலையை பிரதமர் வேட்பாளராக மோடியை முன்னிறுத்த இபிஎஸ்ஓபிஎஸ் இடையே கடும் போட்டி நிலவுகிறது. ஏனெனில், இந்திரா காந்தி குடும்பத்தைத் சேர்ந்த ராகுல் காந்தியை முன்னிறுத்தும் திமுக மீண்டும் அதிக தொகுதிகளில் வெற்றிப்பெறப்போவது உறுதி.

ஆனால், மோடியை முன்னிறுத்தும் அணிதான் 2ஆவது இடத்தை பெற முடியும். தமிழகத்தில் மோடி ஆதரவு, எதிர்ப்பு என்ற மையத்தில் தான் இந்த முறை வாக்குகள் விழுவதற்கான வாய்ப்புகள் என்பதால் பாஜகவை தவிர்த்துவிட்டு யார் நின்றாலும் 3ஆவது இடத்துக்கு தள்ளப்படப்படுவது உறுதி.

2014 மக்களவைத் தேர்தலில் ஒன்றுக்கொன்று முரண்பாடு உள்ள கட்சிகளுடன் களம் இறங்கிய மோடி தலைமையிலான பாஜக அணி 18.5 சதவீத வாக்குகளுடன் 3 தொகுதிகளில் வென்றது. 2019 மக்களவைத் தேர்தலில் அதிமுகபாஜக கூட்டணியில் மோடியை முன்னிறுத்தியபோது 30 சதவீத வாக்குகள் மட்டும் தான் கிடைத்தது.

2016 பேரவைத் தேர்தலில்




**தமிழகத்தில் 2ஆவது பெரிய கட்சியாக அதிமுகவை நிலைநிறுத்த பாஜக ஏணியில் ஏற இபிஎஸ் காய்நகர்த்தி வருகிறார். ஆனால், இபிஎஸ் அடைய துடிக்கும் 2வது இடத்தை தட்டிப்பறிக்கும் முயற்சியில் இறங்கியிருக்கிறார் ஓபிஎஸ். இதனால், பாஜகவின் பேர வலிமை தொடர்ந்து அதிகரித்து வருகிறது. இதை பயன்படுத்தி தமிழகத்தில் இரட்டை இலக்க எண்ணிக்கையிலான தொகுதியில் போட்டியிட பாஜக முடிவு செய்துள்ளது.**

அதிமுகவுக்கு கிடைத்த 41.5 சதவீத வாக்குகளில் இருந்து 14 சதவீத வாக்குகள் மட்டும் தான் மோடி தலைமைக்கு பரிமாற்றமாகியுள்ளது. மீதமுள்ள 27 சதவீத வாக்குகள் மோடி தலைமையை பிடிக்காமல் வெளியேறியுள்ளது. அதில் கிட்டதட்ட 17 சதவீத வாக்குகள் ராகுல் காந்தி தலைமைக்கும், 5.5 சதவீத வாக்குகள் டி.டி.வி.தினகரனுக்கும், 3.8 சதவீத வாக்குகள் கமலுக்கும், 2.7 சதவீத வாக்குகள் சீமானுக்கும் சென்றுவிட்டன.

இருப்பினும், 2019 மக்களவைத் தேரத்லில் மோடிக்கு கிடைத்த வாக்குகளை விட 2021 பேரவைத் தேர்தலில் இபிஎஸ் தலைமைக்கு கூடுதலாக 10 சதவீத வாக்குகள் கிடைத்தன. 2019இல் அதிமுகபாஜக கூட்டணிக்கு கிடைத்த 30 சதவீத வாக்குகளும் மோடி தலைமையை முழுமையாக ஏற்றுக்கொண்ட வாக்குகள். அதிமுக வாக்குகளில் மோடிக்கு ஆதரவு, எதிர்ப்பு என இரு தன்மை வாக்குகள் இருப்பது இதன் மூலம் தெளிவாகுகிறது.

எனவே, எதிர்வரும் மக்களவைத் தேர்தலில் மோடியை பிரதமர் வேட்பாளராக முன்னிறுத்தும் அணி இந்த 30 சதவீத வாக்குகளில் பெரும் பகுதியை பெற்று 2ஆவது இடத்தை உறுதி செய்ய முடியும். இதனால் தான் இபிஎஸ், ஓபிஎஸ் என இருவருமே மக்களவைத் தேர்தலில் அதிமுக அணியில் இடம்பெற மும்முரம் காட்டி வருகின்றனர்.

பாஜகவுக்கு யார் லாபம் 2021, 2022 ஆம் ஆண்டுகளில் சிறுபான்மையினர் வாக்குகள் வராது என எண்ணி பாஜகவை ஒதுக்க நினைத்த இபிஎஸ், திமுக கூட்டணியில் இருந்து காங்கிரஸ், விசிக விலகி வரும், மெகா கூட்டணி அமைக்கலாம் என கனவு கண்டிருந்தார். ஆனால், ராகுல் காந்தி பதவிநீக்க விஷயத்தில் திமுக கூட்டணி கட்சிகள் ஒத்த கருத்துடன் ஓங்கி குரல் கொடுத்ததால், மெகா கூட்டணி கனவை கலைத்த இபிஎஸ், பாஜகவுடன் மீண்டும் நெருங்கத் தொடங்கியுள்ளார். தில்லிக்குச் சென்று மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷாவை சந்தித்து கூட்டணியை இறுதி செய்துவிட்டதாக தெரிவித்தார். ஆனால், இதுவரை அதிமுக கூட்டணியை பாஜக உறுதி செய்யவில்லை.

கர்நாடக பேரவைத் தேர்தலில் இபிஎஸ், ஓபிஎஸ் என இருவருமே பாஜகவுக்கு ஆதரவு தெரிவித்தனர். புதிய நாடாளுமன்ற திறப்பு விழாவிலும் இபிஎஸ், ஓபிஎஸ் இருவருமே பாஜகவுக்கு ஆதரவாகவே உள்ளனர்.

தமிழகத்தில் 2ஆவது பெரிய கட்சியாக அதிமுகவை நிலைநிறுத்த பாஜக ஏணியில் ஏற இபிஎஸ் காய்நகர்த்தி வருகிறார். ஆனால், இபிஎஸ் அடைய துடிக்கும் 2ஆவது இடத்தை தட்டிப்பறிக்கும் முயற்சியில் இறங்கியிருக்கிறார் ஓபிஎஸ்.

இதனால், பாஜகவின் பேர வலிமை தொடர்ந்து அதிகரித்து வருகிறது. இதை பயன்படுத்தி தமிழகத்தில் இரட்டை இலக்க எண்ணிக்கையிலான தொகுதியில் போட்டியிட பாஜக முடிவு செய்துள்ளது.

கர்நாடகப் பேரவைத் தேர்தலுக்குப்பின் பஞ்சாப், தமிழகத்தில் மாநில பாஜக செயற்குழுக் கூட்டம் நடந்தது. பஞ்சாபில் சிரோன்மணி அகாலிதளத்துடன் கூட்டணி அமைக்கக்கூடாது என தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. 15 சதவீத வாக்குபலம் கொண்ட அகாலிதளம் கட்சிக்கு எதிர்ப்பு வாக்குகள் இருப்பதால், பாஜக தனித்து களம் இறங்கினால் ஆம் ஆத்மி, அகாலிதளம் வலுவடைந்து காங்கிரஸ் வாக்குகள் கரையும். இதன் மூலம் பாஜக பலம் பெறும் என அம்மாநில நிர்வாகிகள் கணக்குப் போட்டுள்ளனர்.

அதேபோல, தமிழகத்திலும் பாஜக தேசிய அமைப்புப் பொதுச்செயலர் பி.எல்.சந்தோஷ் முன்னிலையில் கோவையில் நடந்த பாஜக மாநிலச் செயற்குழுக்கூட்டத்தில் அண்ணாமலை பேசும்போது, பாஜக குறைந்தபட்சம் 25 தொகுதிகளில் போட்டியிடும் என பேசியுள்ளார். அவர் பேசிய ஒருவாரத்துக்கு மேல் ஆகியும் இதுவரை அதிமுக தரப்பில் இருந்து கண்டனம் வரவில்லை.

வழக்கமாக பாஜக கருத்து கூறிய அடுத்த சில தினங்களுக்குள் தங்களது கண்டனத்தை அழுத்தகமாக பதிவு செய்யும் அதிமுக இம்முறை அடக்கிவாசிக்கிறது. காரணம், மக்களவைத்தேர்தலில் பாஜக கூட்டணி இல்லையென்றால் மூன்றாவது இடத்துக்கு அதிமுக தள்ளப்படக்கூடும் என அதிமுக கருதுகிறது.

பாஜகவின் மற்றொரு கணக்கு இபிஎஸ் தனித்து போட்டியிட்டால் ராகுலுக்கு வாக்களித்த இபிஎஸ் ஆதரவார்களில் ஒரு பகுதியினர் மீண்டும் இபிஎஸ் பக்கம் திரும்பக்கூடும். இதன் மூலம் திமுக அணியின் வாக்குபலம் சற்று குறைந்து பல முனை போட்டியில் பாஜகவின் எதிர்ப்பு வாக்குகள் சிதைந்து தென்மாவட்டங்களில் ஒரு சில தொகுதிகளில் பாஜக அணியால் வெற்றிப்பெற முடியும். குறிப்பாக தென்காசி, ராமநாதபுரம், விருதுநகர், தேனி, சிவகங்கை ஆகிய தொகுதிகளில் பாஜக-ஓபிஎஸ் அணி இணைந்து போட்டியிட்டால் வெற்றிக்கான கோட்டை தொட முடியும் என்பது பாஜகவின் நம்பிக்கை.

அதேவேளையில் இபிஎஸ் உடன் கூட்டணி வைத்ததால் தென் மாவட்டங்கள், டெல்டாவில் 14 தொகுதிகளில் ஓபிஎஸ்டி.டி.வி.தினகரன் அணி வாக்குகளை பிரித்து, பாஜக இபிஎஸ் அணியை மூன்றாவது இடத்துக்கு கூட தள்ளக்கூடும்.

தமிழகம் முழுவதும் கட்டமைப்பு கொண்டது இபிஎஸ்தான். 62 எம்.எல்.ஏ.க்கள், 79 மாவட்டச் செயலர்கள், 95 சதவீத கட்சி இருப்பதால் 40 தொகுதிகளில் களத்தில் திமுககாங்கிரஸ் அணியோடு தாக்குப்பிடித்து நிற்க முடியும் என்ற எண்ணம் தமிழக பாஜகவில் பெரும்பாலான தலைவர்களிடமும், தேசிய பாஜக தலைமையிடமும் உள்ளது.

இருப்பினும், திருச்சியில் நடந்த ஓபிஎஸ் தலைமையிலான மாநாட்டுக்குப்பின் அந்த எண்ணம் படிப்படியாக மறையத் தொடங்கியுள்ளது.

அடுத்து சேலம், கோவை என தொடர்ந்து மாநாடுகள் பாஜகஓபிஎஸ் இடையே மேலும் நெருக்கத்தை ஏற்படுத்தக்கூடும் எனப்து அரசியல் ஆய்வாளர்களின் நம்பிக்கை.

அதிமுக கூட்டணியில் அதிக தொகுதிகள் பெற வேண்டும் என பாஜக கருதும் நிலையில், அந்த அணியில் பாமக இடம்பெறுவது சாத்தியமா என்பது அடுத்த சிக்கல். 2019 மக்களவைத்தேர்தலில் அதிமுக அணியில் பாமக 7 தொகுதிகள், ஒரு மாநிலங்களவை பதவி, பாஜகவுக்கு 5 தொகுதிகள் என்றும் 2021 பேரவைத் தேர்தலில் பாமகவுக்கு 23 தொகுதிகள், பாஜகவுக்கு 20 தொகுதிகள் ஒதுக்கப்பட்ட நிலையில், 2024 மக்களவைத்தேர்தலில் பாஜகவைவிட, குறைந்த எண்ணிக்கையில் தொகுதிகளை பாமக பெற சம்மதிக்குமா என்பது கேள்விக்குறி.

பாஜக ஏணியில் ஏறப்போவது யார் என்ற கேள்விக்கான விடை தெரிய இன்னும் சில மாதங்கள் ஆகலாம்.

### கடைசி நேரத்தில் தான் முடிவு தெரியும்

இது குறித்து அரசியல் விமர்சகர் ரிஷி கூறும்போது, பாஜகவை பொறுத்தவரை தேசிய அரசியலில் பாஜக முன்னே செல்கிறதா என்பதை பொறுத்து தமிழகத்தில் கூட்டணி வியூத்தை அமைப்பார்கள். தற்போது பாஜகவின் நிலைப்பாடு திமுக அரசுக்கு மிகப்பெரிய அதிப்திச இருப்பதாக உணர்கிறார்கள் அதன் காரணமாகவே அமைச்சர் செந்தில் பாலாஜி மீதெல்லாம் வருமானவரி சோதனை நடக்கிறது.

ஜி ஸ்கொயர், கள்ளச்சாராய விவகாரம் காரணமாக ஏற்பட்ட அதிருப்தியை எடப்பாடி பழனிச்சாமி தலைமையில் அதிமுகவோடு சென்றால்தான் அறுவடை செய்ய முடியும் எனும் கருத்தை பெரும்பாலான பாஜக மாநில நிர்வாகிகள் நம்புகிறார்கள். ஆனால் பிரதமர் மோடிக்கு ஓ பன்னீர்செல்வத்தின் மீது நன்மதிப்பு இருக்கிறது என்பதும் உண்மை.

இவை இரண்டையும் பொறுத்து யாரிடம் கூட்டணி அமைப்பது என்பது தெரியும். தற்போது எடப்பாடி பழனிச்சாமி திலைமையிலான அதிமுகவுடன் கூட்டணி சேர அதிக வாய்ப்புள்ளது. ஆனால் பாஜக மாநிலத் தலைவர் அண்ணாமலை மட்டும் தனித்து கலந்து காண விருப்பப்படுகிறார். தேசிய கட்சிகளைப் பொறுத்தவரை எந்த வகையில் முடிவெடுக்கிறார்கள் என்பது இறுதி நிமிடமே தெரியும் என்றார்.